குணா கல்வி நிலையம்
திருக்கோணமலை
2013ம் ஆண்டில்
புலமைப்பரிசில் பரீட்சையை
எதிர் நோக்கும்
மாணவர்களுக்கான
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
உங்கள் வெற்றிக்கு குணாவுடன்
இணையுங்கள்
0777 03 49 08

ஐப்பசி மாதம் 5ம் திகதி

October 21, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 13

MALAIMURASU


உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை — 20.00 | பக்கங்கள் — 10 | பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# வலைப்பின்னல் வர்த்தகத்தைத் தடைசெய்தது அகில இலங்கை ஜமயத்துள் உலமா

கூம்பு(பிரமிட்) மற்றும் வலைப் பின்னல் வர்த்தகத்தில் நாடாளாவிய ரீதியில் முஸ்லிம் மக்களைப் பங்கேற்க வேண்டாம் எனத் தடைசெய்து அறிவித்தலை விடுத்துள்ளது அகில இலங்கை இஸ்லாமிய ஜமயத்துள் உலமா சபை.

திருக்கோணமலையிலும் பிரபல்யமாகிவரும் இத் திட்டத்தில் பலர் இணைவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. ஏற்கனவே கூம்புத்திட்டத்தின் (பிரமிட் திட்டத்தின்) அடிப்படையில் "தங்கக் காசு" எனும் வலைப்பின்னல் திட்டமொன்று பெருமளவு நிதியினைச் சுருட்டிய போது இலங்கையின் மத்திய வங்கி அதனைத் தடைசெய்திருந்தது. அத்திட்டம் தடைசெய்யப்பட்ட போது கடைசியாக அத் திட்டத்தில் நுழைந்திருந்த மக்கள் அனைவரும்



"அகில இலங்கை ஜமயத்துள் உலமா சபையின் முழுச் செய்தியையும் உள்ளடக்கிய அறிக்கை உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளது."

தமது முதலீட்டினை இழந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது வேறு பெயருடன் உலாவரும் இப் புதிய திட்டத்திலும் கடைசியாகச் சேர்பவர்கள் மேலும் மூன்று வாடிக்கையாளர்களை இணைக்காது போனால் அவர்களுக்குக் கிடைக்கும் என ஆசை காட்டப்படும் வருமானம் கிடைக்காது போய்விடும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அத்துடன் பொருளைப் கொள்வனவு செய்யும் நபர் மேலும் மூவரைச் சேர்க்காத போது அவர் சார்ந்த வலைப்பின்னல் உடைந்து வலுவிழக்கும் அபாயமும் காணப்படுகின்றது.

இத்திட்டத்தில் சேர்பவர்களால் கொள்வனவு செய்யப்படும் பொருள் மிகவும் மலிந்த தரப் பொருளாகக் காணப்படுவதாக அதிலிணைந்தவர்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி வார கண்காட்சி

திருக்கோணமலை பட்டணமும் சூழலின் பிரதேச சபை நூலகங்களுக்கு இடையில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நூல்கள், கைவினைப்

(10ம் பக்கம் பார்க்க)

## கட்டுரைப் போட்டியில் முதலிடம்.

திருக்கோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் கலைமன்றத்தால் திருமலை வலய மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் லிங்கநகர் கோணலிங்க வித்தியாலய மாணவி J.ஜெயகௌரி கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## கல்வியே எனது முதல் நோக்கு


### மாகாண முதல்வர்



இலங்கையின் நீடித்த நிலையான அபிவிருத்திக்கு இனங்களுக்கிடையிலான ஒற்றுமை வாம்வும், சமாதானப்

(10ம் பக்கம் பார்க்க)

## தனியார் பேரூந்துகள் இயங்கவில்லை



திருக்கோணமலைப் பிரதான பேரூந்து நிலையத்தில் ஏற்பட்ட இழுபறிநிலை முடிவுக்கு வராததால் சுமார் மூன்று மணித்தியாலங்களாக தனியார் பேரூந்துகள் எவையும் சேவையில் ஈடுபடாத நாளாக 17.10.2012 பதிவாகியுள்ளது.

அதிகாலையில் புறப்பட்டுச் சென்ற இரண்டு தனியார்

(10ம் பக்கம் பார்க்க)

## ஐநாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலக திருமலைக் கிளை மூடப்படுகின்றது.



1995ம் ஆண்டு தொடக்கம் இயங்கிவந்த ஜக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலக [ United Nations High Commissioner for Refegees - UNHCR] திருமலைக் கிளை இவ்வாண்டின் 31ம் திகதியுடன் தனது திருமலை அலுவலகத்தை மூடவுள்ளது. அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைககள் இவ்வாரத்திலேயே ஆரம்பமாகியுள்ளன. இவ் அலுவலகமே முதன் முதலில் திருக்கோணமலையில் தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகமாகும். இவ்வலுவகத்தைத் தொடர்ந்து ஜக்கிய நாடுகள் சபையின் ஏனைய அலுவலகங்களான ஐ.நாவின் குழந்தைகள் கல்வி நிதி நிறுவனம் (யுனிசெவ்) ஐ.நாவின் அபிவிருத்தி அலுவலகம் (யுன்டிபி) ஐ.நாவின் உலக உணவுத்திட்டம் (டபிள்யு எவ் பி)

(10ம் பக்கம் பார்க்க)

## பேச்சுப் போட்டியில் முதலிடம்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் லிங்கநகர் கோணலிங்க வித்தியாலய மாணவி செல்வி.அஞ்சலினா மயில்வாகனம் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாகத்தில் வாணிவிழா

கிழக்கு பல்கலைக்கழக திருக்கோணமலை வளாகத்தில், சரஸ்வதி பூசை நிகழ்வுகள் கடந்த 16ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றது. வளாக இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில்

(பவாஸ்) (10ம் பக்கம் பார்க்க)

## அதிபர் பதவிகளில் இழுபறி

திருக்கோணமலை கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்புச் செய்வதில் தொடர்ந்து இழுபறிநிலை நிகழ்ந்து வருவதாக நம்பத்தகுந்த செய்திகள் வெளியாகி உள்ளன.

தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி, தி/ இறக்கக் கண்டி அல் ஹம்றா முஸ்லிம் மகா

(10ம் பக்கம் பார்க்க)

விருப்புடையோர் எல்லோரும் வருக

"அரங்காடல்"

வெளி - 06

26.10.2012

இந்துக்கல்லூரி மண்டபம், திருக்கோணமலை

மாலை 04.00 மணி

4.00 தமிழ் மொழி வாழ்த்து - செல்வி. நவசஞ்சிதா
4.05 நிகழ்வுரை - இ. ஸ்ரீஞானேஸ்வரன்
4.10 நடனம் - கௌத்துவம் - திருமதி.கோ. சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகள்
4.20 குமரிக்கோடு (குமரிக்கண்ட ஆராய்ச்சி)- முனைவர். திரு.ஜெஅரங்கராஜ் அவடகள், ஆகோள் ஆய்வு மையம்
4.40 கிராமிய நடனம் - செல்வி ஜெகதீஸ்வரி அவர்களின் கலைக்கோவில் நடனப்பள்ளி மாணவிகள்
4.50 வயலின் இசை - ஆசிரியர் திருமாறன் அவர்கள்
5.10 அரங்காற்றுகை - "அரங்காலயா" வின் அளிக்கை
5.40. நடனம் - திருமதி.கோ. சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகள்
5.50 தமிழர்கள் "வாழ்வும் வரலாறும்" பாகம் 1 - மாயன்
6.15 கருத்தாடல் - சபையோர்
6.25 நிறைவுரை - பிரதீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

உலகத்தின் போக்கில் இன்று மிகப் பிரதானமாகப் போயிருப்பது வெறும் தாள்கள் (Papers) என்பதில் நீங்கள் சந்தேகம் கொள்ளலாம். தாள்களா? என்ற கேள்வியும் எழலாம். ஆனால் நான் குறிப்பிட்ட தாள்கள் பணம் எனும் பிரமாண்டமான தாள்களைத்தான். பொருளாதார அச்சிற் சுழலும் உலகத்தின் தற்போதைய நிலையைப் பணம் தான் தீர்மானிக் கின்றது. சுதந்திரப் போர்களை சுக்குநூறாக்கியும், உள் நாட்டுப் போர்களை உலகப் போர்களாக்கியும் பணம் தனது சாகசத்தைப் புரிகின்றது. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் அப் பணம் எவ்வாறு உழைக்கப்பட்டது என்பதை இப்போ தெல்லாம் யாரும் கவலை கொள்வதில்லை. பணம் படைத்தவன் உலகை ஆளலாம், அதற்குப் படித்தவரும் துணை போகலாம் எனும் போக்கிலியங்கும் உலகில் திருக்கோண மலையில் தற்போது வேகமாகப் பரவிவரும் பணக்காய்ச்சல் "வலைப் பின்னல் சந்தைப்படுத்தல்" எனும் காய்ச்சலாகும்.

படித்தவர்களை யோக்கியர்கள் என்றும், வெள்ளைத் தோல் கொண்ட மேல்நாட்டு மனிதர்களை அதியோக்கியர்கள் என்றும் எண்ணும் உண்மை மனிதர்களைக் குறிவைத்து நகரும் இவ்வியாபாரப் பின்னலில் ஒவ்வொரு நாளும் யாரோ ஏமாற்றப் பட அதே கணத்தில் யாரோ இலாப முழைத்துக்கொண்டு செல்கின்றார்கள். "ஏமாற்றி விற்பது தான் வியாபாரம்" எனும் புதிய சந்தைப்படுத்தல்க் கருத்தை உருவாக்கிக் கொண்டுள்ள இவ்வகை வியாபாரங்களில் முதல்ப டியில் நின்று அதிகூடிய இலாபம் உழைப்பவர் களுக்குள் படித்த சிலரும், வலுக்கொண்ட அரசியல் வாதிகள் சிலரும் தமக்கென வியாபார தாபனங்களை உருவாக்கிக் கொண்டு களம் இறங்கியுள்ளார்கள்.

மேலை நாட்டவர்களை நாம் இப்போதும் "சேர்" என விளிப்பதை பண்பாகக் கொண்டுள்ளோம். அப் பண்பு ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சியின் பெறுபேறாய் எம் ஜனன விதையில் ஊறிப்போய் இருக்கின்றது. அதனைப் பணமாக்க அவர்கள் விழைகின் றார்கள். வெண்ணிறத் தோலும், நுனிநாக்கு ஆங்கிலமும், கழுத்துப் பட்டியும், கால்சா ராய்களும் ஏமாற்றுவித்தைக் காரர்களிடமும் தஞ்சமடைந்து விட்டது என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வாறான ஏமாற்றுத் திட்டமொ ன்றே இரு வருடங்களுக்கு முன் இலங்கை முழுவதும் பரவிப் பின் மத்திய வங்கியின் தடையால் இல்லாதொழிக்கப்பட்டது. அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட போது எனக்குத் தெரிந்த ஒருவர், உவர்மலையில் வசிக்கி ன்றார், எனது அன்புத் தடைகளையும் மீறி மனைவியின் நகைகளை அடைவு வைத்து அவ் வியாபாரத்தில் கடைசியாக இணைந் திருந்தார். இறுதியில் அவர் தனது நகைகள் ஏலத்தில் போவதைப் பார்க்கப் போயிருந்ததாக பின்னர் அறிந்து கொண்டேன்.

ஏமாற்றும் வர்த்தகத் திட்டங்கள் தொடர்பாக இலங்கையின் மத்திய வங்கி தனது தெளிவான வரைய றைகளை மக்களுக்காக வழங்கி யுள்ளது. எனினும் வலுக்கொண்ட அரசியல்வாதிகள் இவ்வியாபாரத்தில் தொடர்புறுவதால் இவ்வியாபாரத்தைத் தடுக்க வேண்டிய அமைப்புக்கள் தமது வாயைக் கட்டிக்கொள்ள வேண்டியுள்ளதோ தெரிய வில்லை. எவரோ சிரமப்பட்டு உழைக்க உங்களுக்குப் பணம் கிடைக்கின்றது எனும்போதே உங்கள் உண்மை அறிவிற்குப் புரியும் இவ்வருவாய் தவறான உழைப்பென்று.

சுரண்டிச் சாப்பிடும் ஒருவகை வியாதியாக பல்கிப் பெருகும் இவ்வியாதி யிலிருந்து நாங்கள் விலகியிருப்பதுடன் மற்றவர்களையும் விலகியிருக்க அறிவுறுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. முதலில் நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்! அதன் பின் மற்றையவர்களுக்கும் தெரியப் படுத்துங்கள். தெரியப்படுத்துவோமா?

-ஆசிரியர்-

# மூதூரில் ஆசிரியர் தின விழாக் கொண்டாட்டங்கள்

(இ.மு.இம்தியாஸ்)

கற்பித்த ஆசான்களை நினைவுகூறும் மகத்தான ஆசிரியர் தின விழா மூதூரிலும் மிகவும் கோலாகலமான முறையில் நடந்தேறியுள்ளது. மாணவர்களை வியப்பூட்டும் ஆசிரியர்களின் திறமைமிக்க போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் அனைத்து பாடசாலைகளிலும் சிறப்பாக நடைபெற்றுமுடிந்தது.



கடந்த .2012.10.06 ம் திகதி அந்நஹார் மகளிர் மகாவித்தியாலயத்திலும், 2012.10.08ம் திகதி அல்மினா மகா வித்தியாலயத்திலும், மூதூர் சிங்கள மகாவித்தியாலயத்திலும், 2012.10.09ம் திகதி அந்தோனியார் மகாவித்தியால யத்திலும், 2012.10.10 ம் திகதி அல்-ஹைரியா வித்தியாலயத்திலும், 2012.10.11ம்திகதி மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், 2012.10.13ம் திகதி மூதூர் மத்திய கல்லூரி(தேசிய) பாடசாலையிலும் ,2012.10.16ம் திகதி மூதூர் சதாம் வித்தியாலயம், மூதூர் அல்ஹிதாயா மகா வித்தியாலயம், மூதூர் அல் ஹிலால் மத்திய கல்லூரியிலும் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடந்தேறின. அந் நிகழ்வுகளுக்கு பாடசாலை நலன்புரிச்சங்கம் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கங்கள் ஆகியவற்றின் அனுசர ணையுடன் உயர்தர வகுப்பு மாணவர் களால் விழா ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது. இந்நிகழ்வுகளின் போது மாணவர்களால் ஆசிரியர்களுக்கு பெறுமதி மிக்க நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

# காசைத் தொலைத்த மாணவியைக் காப்பாற்றிய வைத்தியர்.

திருக்கோணமலையின் பிரபல பெண்கள் பாடசாலை மாணவி ஒருவர் சுமார் 5000 ரூபாய்ப் பணத்தை தனது கவனயீனத்தால் தொக்கியாட் வீதி கிருஸ்தவ மயானத்துக்கு முன்னால் தவறவிட்டுள்ளார். அப்பாடசாலையின் பாண்ட் வாத்திய இசைக்குழுவிற்காக சேர்க்கப்பட்ட இப்பணத்தொகையை அவர் தொலைத்திருந்தார்.

ஆனால் தற்செயலாக அவ் வீதியால் சென்ற திருமலை தள வைத்திசாலையின் பல் மருத்துவரான சசிதரன் அவர்கள் போக்குவரத்து காவல்துறையினாரால் சோதனைக்காக நிறுத்தப்பட்ட வேளை பணமுடிச்சொன்று போக்குவரத்துக் காவல்துறையினருக் அருகில் கிடப்பதை அவதானித்து அதனை இலாவகமாக எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். பின்னர் அப் பணமுடிச்சை உரிய பிரபல பெண்கள் பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளார்.


தெய்வச் செயலாக அப்பணப் பொட்டலம் வைத்தியரின் கண்களுக்கு மட்டுமே தெரிந்ததால் உரியவரிடம் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் வாக்கு எண்ணுகையில் மோசடி

## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் வழக்குத் தாக்கல்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படாத முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளரான சட்டத்தரணி லாஹிர் அவர்கள் "வாக்கெண்ணும் நிலையங் களில் மோசடி " நிகழ்ந்துள்ளதாக கூறி கொழும்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வாக்கெண்ணும் நிலையத் திலிருந்த தமது ஆதரவாளர்களின் தகவல்களின்படி தாமே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னிலை பெற்றிருந்ததாகவும் இறுதி முடிவுகள் தமக்குப் பெரும் பாதகமாக அமைந்துவிட்டதாகவும், அதனாலேயே தாம் வாக்கெண்ணும் நிலையங்களில் மோசடி நடந்துள்ளதாகத் திடமாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.



வழக்கின் பிரதிவாதிகளாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டத் தேர்தல்ப் பிரதி ஆணையாளர், முஸ்லிம் காங்கிரசின் தலைவர், செயலாளர், மாவட்டத்தில் மு.காவுடன் இணைந்து போட்டியிட்ட உறுப்பினர்கள் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# சமுர்த்தி உதயம் வர்த்தக கண்காட்சி

"திவிநெகுமவிற்கு சமுர்த்தியின் சக்தி" எனும் தொனிப்பொருளில் 'சமுர்த்தி உதயம் வர்த்தக கண்காட்சி - 2012' எனும் தலைப்பில் வர்த்தகக் கண்காட்சியொன்றை திருமலை மாவட்டச் செயலகம், பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகப் பிரிவுடன் இணைந்து நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 20ம் திகதியும் 21ம் திகதியும் திருமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற உள்ள இக் கண்காட்சியில் அனைவரும் கலந்து கொள்ள முடியும். இக் கண்காட்சி 20ம் திகதி காலை 10மணிக்கு ஆரம்பிக்கப படவுள்ளதாகத் திருமலை மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

# கிராம சேவகருக்குப் பாராட்டும் வரவேற்பும்

செல்வநாயகபுரம் மகளிர் சங்கம் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் அண்மையில் ஓய்வு பெற்ற கிராமசேவகர் திரு.செ.சந்திரகுமார் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் சிகழ்வு கடந்த செவ்வாக்கிழமை செல்வநாகபுரம் செல்வ சனசமூக நிலையத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் கிராமசேவகர் திரு.முனீஸ்வரன், செல்வநாயகபுர காவல்துறை உத்தியோகத்தர் திரு. போல் சனசமூகநிலைய தலைவரும் குருக்களுமான சிவஸ்ரீ. ஜெகதீஸ்வரசர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிதிகள் உரையை தொடர்ந்து பொதுமக்களும் தம் கருத்துக்களை தெரிவித்தனர். அவ்வுரைகள் கிராம சேவகரின் ஓய்வு குறித்த ஆற்றாமையை வெளிப்படுத்தும் கண்ணீர் உரைகளாக அமைந்தன.

இறுதியில் 'மக்களின் கஸ்டங் கள், குறைகளை கேட்டு நிவர்த்தி செய்கையில் சேவகன் கடவுளாக மதிக்கப்படுவான்' என தன் ஏற்புரையின் போது கிராமசேவகர் செ.சந்திரகுமார் தெரிவித்திருந்தார். இறுதியில் ச.திருச் செந்தூரனின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# 2012 இலங்கை அரசின் ஆசிரியர் பிரதீபா விருதை வென்றவர்கள்

1. திரு. க. யோகானந்தம் (அதிபர் - தி/கோணலிங்க வித்தியாலயம்)
2. திரு. க.சதாசிவம் (அதிபர் - தி/ கன்னியா அ.த.க. பாடசாலை)
3. திருமதி. உ.ஸோதிநாதன் (அதிபர் - தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)
4. திரு. அ.ஹரிஹரன் (ஆசிரியர் - தி/விக்கேஸ்வர ம. வித்தியாயலம்)
5. செல்வி. செ.வடிவாம்பாள் (ஆசிரியர் - தி/சண்முக இ.ம.கல்லூரி)
6. செல்வி. S.பாலேந்திரா (ஆசிரியர் - தி/சண்முக இ.ம.கல்லூரி)
7. செல்வி. வ.ராஜேந்திரன் (ஆசிரியர் - தி/சண்முக இ.ம.கல்லூரி)
8. திரு. தா. கௌரிமேனன் (ஆசிரியர் - தி/புனித சூசையப்பர் கல்லூரி)
9. திருமதி. தி. சுதாகரன் (ஆசிரியர் - தி/புனித சூசையப்பர் கல்லூரி)

# சுவரொட்டிச் சித்திரப் போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி கடைப்பிடிக்கப்பட இருக்கின்ற சர்வதேச தன்னார்வ ஊழியர் தினத்தினை முன்னிட்டு. 'நீருக்கான தன்னார்வம்' என்ற பெயரில் சுவரொட்டி சித்திரப் போட்டியொன்றை ஐக்கிய நாடுகளின் தன்னார்வ ஊழியர்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் தொடர்பாடல் குழு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

நீர் மற்றும் வறுமை, நீர் மற்றும் விவசாயம், நீர் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நீர் மற்றும் சனத்தொகை வளர்ச்சி, நீர் மற்றும் புறச்சுகாதாரம், நீர் மற்றும் வீடமைப்பு ஆகிய தலைப்புக்களின் கீழ் A2 அளவிலான தாளில் தாளின் ஓரங்களில் 4cm இடைவெளி விட்டு ஓவியரின் பெயருடன் வயதைக் குறிப்பிட்டு ஐக்கிய நாடுகளின் தன்னார்வ ஊழியர்களின் 202 - 204 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு நவம்பர் 2ஆம் திகதிக்கு முன்னதாகவே அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

இப்போட்டியானது கனிஷ்ட பிரிவு (வயது 6 - 10), மத்திய பிரிவு (வயது 11 - 16) சிரேஷ்ட பிரிவு (17 மேல்) ஆகிய பிரிவுகளில் இடம் பெறுவதோடு கனிஷ்ட மற்றும் மத்திய பிரிவு ஓவியங்கள் அதிபர், ஆசிரியர் அல்லது பாதுகாவலரின் உறுதிப்படுத்ததுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசுரம், பிரசவம், பிரவேசம்

ஒரு காலம் எனது இயங்குதளமாக கவிதையே இருந்தது. எனது முதல் ஆக்கமே கவிதைதான். அக்கவிதை பின்வருமாறு தொடங்கும்.

நோய்ப் பிடியில் நுடங்கி நொந்து
பாய்ப்படுக்கையில் முடங்கிக் கிடந்தேன்
என்ன வாழ்க்கை ஏனிதெல்லாம்
செத்துப் போய் சமாதியானால் சத்தமில்லை...

சென்ற வாரம் ஒரு இலக்கிய நண்பரைச் சந்தித்தேன் அவர் என்னை ஒரு கவிஞன் என விளித்தார். அப்போதுதான் எனது கவிதைப் பிரவேசம் பற்றி எழுத வேண்டுமென்ற பொறி தட்டுப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் இலக்கிய நிகழ்வுகளில் கவியரங்கு முக்கிய பங்கைப் பெறும் யாழ் - இலக்கிய வட்டக் கவிஞர்கள் மரபுக் கவிதைகளை மேடையில் அழகாக அரங்கேற்றுவர்கள். இரசிகமணி கனக செந்திநாதன், கவிஞர் வி.கந்தவனம், கவிஞர் மு.செல்லையா, அரியாலையூர் வே..ஐயாத்துரை, காரை செ. சுந்தரம்பிள்ளை, குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) யாழ்ப்பாணன் (வே.சிவக்கொழுந்து) என இப் பட்டியல் நீளும் பட்டிமன்றம் என்ற ஒன்றுக்கு கம்பன் கழகம் வித்திட முந்தி கவியரங்கமே விழாக்களைக் கலகலப்பாக்கிக் கொண்டிருந்தன. இந்தக் கூட்டம் கலைவாதிகளின் கூட்டமாக இருக்க பிறிதொரு வகையான அணி கவியரங்கங்களை போராட்ட முறையில் நடாத்திக் கொண்டிருந்தது. சில்லையூர் செல்வராசன் (தான் தோற்றிக் கவிராயர்) முருகையன், க.பசுபதி (யாழ்ப்பாணக் கவிராயர்) சுபத்திரன் - இ.சிவானந்தன் - இது முற்போக்கு அணி - மக்கள் இலக்கியம் பற்றிக் கூறும் அணி.

எங்களூரில் கலைவாதிகள் அணி அடிக்கடி கவியரங்குகளை ஆற்றிக் கொண்டிருந்தது. பின் நாட்களில் காசி. ஆனந்தன், கா.நவசோதி என கலைக் கான அணியில் பலர் இணைந்து கொண்டார்கள்.

எங்களூரின் கவிக் கோமகன் கவிஞர். மு.செல்லையா. அவர் ஒரு தமிழ் ஆசிரியர். இலக்கிய வட்டப்பிரமுகர். அவரிடம் நான் கல்வி கற்கவில்லை. ஆயினும் கவிதை மீது பாசமுள்ள காரணத்தினால் அவர் மீது அபிமானம் எனக்கிருக்கிறது. அவர் வண்டுவிடுதூது, வளர்பிறை என்னும் இரு கவிதைத் தொகுதிகளின் ஆசிரியர், அவரது கவிதைகளில் ஒன்று கவிஞர் கண்ணதாசனினால் பாரட்டப்பட்ட சம்பவம் எனக்குத் தெரியும். ஒரு வறிய மாதுவின் நிலையை செல்லையா வாத்தியார் ஒரு கவிதையில் பின் வருமாறு எழுதியிருந்தார்.

'நெய்திடு நூலிலும், வைத்திரு நூல் மிக நீளம்' அக் கவிஞர் திடீரென ஒருநாள் காலமாகிவிட்டார். ஊரே அழுதது. இலங்கையின் பல பாகங்களி லிருந்தும் அவரது மரண வீட்டிற்கு கவிஞர்கள், எழுத்தாளர்கள் வந்திருந் தனர். அஞ்சலி உரைகள் பலரால் நிகழத்தப்பட்டன.

நான் ஒரு சிறுவன், வயது 16. கூட்டத்தோடு கூட்டமாக அந்த மரண நிகழ்வில் ஓரமாக நின்று கொண்டிருந் தேன். செல்லையா வாத்தியாருக்கு நானும் ஏதாவது செய்தாக வேண்டும்...? என்னுள் ஆதங்கம் சுடரிட்டது. என்னோடு இரு மரபுக்கவிதைக் குஞ்சுகள் சேர்ந்தார்கள். இன்று கனடாவில் இருக்கும் சமரக்கொடி என்னும் தர்மகுலசிங்கம், கதிர்காமு என்னும்



திருநாவுக்கரசு. மூவரும் இணைந்து கொண்டோம். செல்லையா வாத்தியாரின் அந்தியேட்டி அன்று ஒரு நினைவுமலர் வெளியிடுவதான முடிவுக்கு வந்தோம். அந்த நேரம் ஒரு மலரை வெளியிடுவ தென்றால் இப்போதைய செலவோடு ஒப்பிடும்போது குறைந்த தொகைதான். ஆயினும் அப்போது அது சற்றுக் கடுமையான விடயம். நாங்கள் க.பொ.த.சாதாரண வகுப்புக்கு இன்னும் வராத மணவர்கள். என்னைவிட மற்றவர்கள் செல்லையா வாத்தியாரின் மாணவர்கள். எனவே மிகவும் உற்சாக மாகவிருந்தார்கள் நாம் உண்டியல் ஒன்றைச் செய்து கொண்டு பணம் சேகரிக்க் புறப்பட்டோம். அவமானம், அலட்சியம், புறக்கணிப்பு... ஆயினும் உறுதியாக இருந்து இருபத்திஐந்து நாட்கள் முயன்று பணத்தையும் மலருக்குரிய ஆக்கங்களையும் சேகரித்தோம். 31ம் நாள் பருத்தித்துறை ஊழியன் அச்சகத்திலிருந்து அந்த மிகச் சிறிய நினைவுமலர் வெளிவந்தது. 200 புத்தகங்கள் அச்சிட்டோம். சிறியதொரு செல்லையா வாத்தியாரின் படம் கீழே. தொகுப்பாளர் பட்டியலில் தர்மகுலசிங்கம், திருநாவுக்கரசு, அல்வை தே.ஷேவியர், என அட்டையுடன் அம்மலர் அமைந்திருந்தது. இன்று கவிஞர் அல்வாய் மு.செல்லையாவை தங்கள் சொத்தாகக் கொண்டாடும் பலர் எங்களது அந்தப் பணியைப்பற்றி வாய் கூடத்திறக்கவில்லை. இப்போதும் திறப்பதில்லை. நாங்கள் அந்தப் புத்தகத்தை அந்தியேட்டியில் விநியோகித்தோம். வீட்டார் ஒரு மலர் வெளியிட்டு இரசிகமணி கனக செந்திநாதன் ஒரு பேருரையாற்றினார். எங்களுக்கு ஒருவிதமான ஆதரவு வார்த்தைகளும் கிடைக்கவில்லை. அதனை நாம் எதிர்பார்க்கா விட்டாலும் ஒருவித ஏக்கம் மீந்திருந்தது. காலம் செல்லச் செல்ல என் வாசிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. நான் சமரக்கொடி, கதிர்காமு ஆகியோர் மெல்ல மெல்லப்பிரியத் தொடங்கிவிட்டோம். கவிதையோடு கதைகளை, நாவல்களைப் படிக்கத் தொடங்கினேன். சிறுவர் கவிதைகளை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்புவேன். ஒன்றும் பிரசுரமாகவில்லை. நான் சோர்ந்துவிடவில்லை எழுத்து, எழுத்து, எழுத்து அசுர எழுத்து: வாசிப்பு வாசிப்பு வாசிப்பு அசுர வாசிப்பு.

மிகுதி அடுத்த வாரம் தொடரும்

-நந்தினி சேவியர்-

# கடமையைச் செய் பலனை எதிர்பாராதே.

- பரோதினி -

அது வசந்த காலம் பூக்கள் எல்லாம் பூத்துக் குலுங்கிக் கொண்டி ருந்தன. பறவைகளின் இன்னிசை கீதம் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது. வண்டுகள் தேனைப் பருக விரைந்து கொண்டிருந்தன.

'எல்லோரும் எழும்புங்கள்... நேரம் ஆகிவிட்டது. நாம் தேன் எடுக்கச் செல்ல வேண்டும்.... சீக்கிரம் சீக்கிரம்....' என்று ஒரு குரல் கேட்டது. அப்போது தான் நித்திரை விட்டு எழுந்தது குகனி என்ற தேனீ. ஆம் அது ராணி தேனீயின் கட்டளை. அது வசந்த காலம் அல்லவா? பூக்களில் தேன் அதிகமாக இருக்கும். தேனை சேகரிப்பதே தேனீக்களின் வேலை. அதுதான் குகனி தேனியின் வேலையும்.

அனைத்து 'தேனீக்களும் தேன் எடுக்க தயாராகி நின்றன. அந்த வரிசையில் குகனியும் நின்றான். ராணி தேனீயின் கட்டளைக்காக அனைவரும் காத்துக் கொண்டிருந்தனர். 'ம்... செல்வோம்....' என்று ராணியின் குரல் கேட்டது. அனைவரும் தமது வீடான தேன் கூட்டிலிருந்து வெளியே சென்றனர். தேனை சேகரிக்க ஆரம்பித்தனர்.

அனைவரும் சுறுசுறுப்பாக தேனைச் சேகரிக்க ஆரம்பித்தனர். குகனியும் தேனை விரைவாகச் சேர்த்து தனது கூட்டினுள் சேகரித்தான். தேனீக்கள் மிகவும் சுறுசுறுப்பானவை என்று எமக்குத் தெரியும் தானே......... தேன் சேகரிக்கும் வேலை நிறைவடையும் நேரம் வந்துவிட்டது. அப்போதுதான் குகனியின் மனதுக்குள் ஒரு கேள்வி வந்தது என்ன கேள்வி தெரியுமா? 'நாம் எதற்காகத் தேனைச் சேகரிக்க வேண்டும்......? என்பதுதான். 'ம்... சரி இதனை ராணி தேனியிடம் கேட்டு இதற்கான விடையை அறிவோம் என்று நினைத்தது. அன்றைய நேரம் முடிவுக்கு வந்தது. அனைவரும் தமது கூட்டுக்கு சென்றனர்.

வேலையை முடித்து வந்த அனைத்து தேனீகளும் தமது வீட்டு




வேலைகளைச் செய்ய ஆரம்பித்தன. சில தேனீக்கள் வீட்டை சுத்தம் செய்தன. சில தேனீக்கள் தமது குழந்தைகளுடன் விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தன. குகனி சிறுவனாயிற்றே. வீட்டில் அவனுக்காக அன்று ஒரு வேலையும் இல்லை. குகனி தனது மனதில் தோன் றிய கேள்வியை அடிக்கடி தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருந்தது. பதில் கிடைக்கவேயில்லை. எப்படியாவது கேட்டுவிட வேண்டும் என முடிவு செய்தது.

இரவு உணவை உண்பதற்காக அனைத்து தேனீக்களும் ஒன்று கூடின. அன்றைய இரவு வேடிக்கைகள் நிறைந்ததாக மாறியது. அனைத்து தேனீக்களும் தமது தேன் எடுக்கும் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டன. தேனீக்கள் தாம் சேகரித்த தேனின் ஒரு பகுதியை இரவு உணவுக்காக எடுத்தன.

அனைத்து தேனீக்களும் உணவை உண்டு கொண்டிருந்தன. ராணித் தேனீயும் அங்கு அமர்ந்திருப்பதை குகனி கண்டது. குகனி தனது இருக்கை யிலிருந்து எழுந்து ராணி தேனியைப் பார்த்து 'ராணி அவர்களுக்கு வணக்கம் எனக்கு ஒரு சந்தேகம் உள்ளது. கேட்கலாமா....? என்றது. 'கேள் குகனி....? என்றது ராணி தேனீ.

'ராணி நாம் எதற்காக தேனை சேகரிக்கின்றோம்....?' என்று குகனி கேட்டது. அந்த கேள்வியை கேட்டதும் அனைத்து தேனீக்களும் சிரிக்கலாயின ராணி அனைத்து தேனீக்களையும் அமைதியாக இருக்கச் சொன்னார். தேனீக்கள் அமைதியாகின. 'குகனி நாம் எமது உணவுக்காகவும், எமது குழந்தைகளின் உணவுக்காகவும் தேனைச் சேகரிக்கின்றோம்.' என்றார். ராணி. 'எமது தேவைக்கு சிறியளவு தேன் போதுமானதே..... நாம் ஏன் அதிக தேனை சேகரிக்கிறோம்....? என்று அடுத்த கேள்வியை கேட்டது குகனி. ராணித் தேனி மெல்லச் சிரிக்கத் தொடங்கினார்.

'குகனி அவசர காலங்களில் தேவைப்படும் என்பதற்காக மிகுதி தேன்...' என்றார் ராணி. குகனி சிறிது நேரம் யோசித்தது. 'ராணி மீண்டு மீண்டும் நான் கேள்வி கேட்கிறேன் என்று கோபம் கொள்ளாதீர்கள்.... அவசர காலங்களில் தேவைப்படுவதைவிட நாம் அதிகமாக சேகரிக்கிறோம் என நான் நினைக்கிறேன்.....' என்றது.

குகனி கேட்ட கேள்விக்கு ராணித் தேனி கோபப்படவில்லை. பதில் சொல்ல அரம்பித்தது. 'நாம் சேகரிக்கும் தேனிக்களில் மிகுதி மனிதர்களுக்கு என்றது...' 'ஏன் மனிதர்களுக்கு....? நாம் கஷ்டப்பட்டு உழைப்பதை நாம் ஏன் சோம்பேறிகளான மனிதர்களுக்கு கொடுக்க வேண்டும்.....? என குகனி கேட்டது.

அதற்கு ராணி 'குகனி தேனை சேகரிப்பது எமது கடமை என்று உனக்கத் தெரியும் தானே.... அதுபோலத் தான் நாம் சேகரித்த தேனின் ஒரு பகுதியை மனிதர்களுக்கு கொடுப்பது எமது கடமை என்றது.குகனி மீண்டும் கேட்க 'சரி கடமையை விட உதவி என்று வைத்துக் கொள்ளேன்.....' என்றது ராணித் தேனி. 'மனிதர்கள் எமக்கு என்ன உதவி செய்கிறார்கள்...? ஒன்றுமில்லையே.... பிறகு நாம் ஏன் உதவி செய்ய வேண் டும்?' என்று மீண்டும் குகனி கேட்டது.

'குகனி நீ ஒன்றைப் புரிந்து கொள் எதிர்பார்த்து செய்வது உதவியல்ல எதிர்பார்ப்பு இல்லாததுதான் உதவி. எமது உதவி எதிர்பார்ப்பு இல்லா தது....' என்று ராணி தேனீ சொன்னது.

குகனிக்கு அப்போது ஒரு உண்மை விளங்கியது. 'நான் உதவி செய்கிறேன்.... எனது உதவி எதிர்பார்ப்பு இல்லாதது....' என்பது தான். குகனியின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. தனது கேள்விக்குப் பதிலளித்த ராணிக்கு நன்றி கூறியது.

அடுத்தநாள் மிக மகிழ்ச்சியோடு தேனைச் சேகரிக்கத் தொடங்கியது. குகனி.... மனிதர்களுக்கு உதவி செய்வதற்காக......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் மற்றும் வலைப்பின்னல் வியாபாரக் கட்டமைப்பு முறைமை பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

(பவாஸ்)

**அறிமுகம்**

இன்று இலகுவான வழிகளில் அதிகதிகம் சம்பாதித்துக் கொள்வதற்கான புதிய வர்த்தக, வியாபார, பொருளீட்டல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வீட்டிலிருந்து கொண்டே உழைத்துச் சொத்து சேர்க்க முடியும் என்று கவர்ச்சிப் பிரசாரம் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அவற்றிலுள்ள முறைகேடுகள், இஸ்லாமிய வரையறைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் முஸ்லிம்களும் இதில் ஈடுபடுகின்றனர். எனினும், முஸ்லிமை பொறுத்தவரை அது பற்றி விசாரித்து, இஸ்லாமிய வரையறைகளை அவதானித்து, ஆலிம்களின், அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்றே நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அவசரப்பட்டு காரியத்தில் இறங்கி கைசேதப்படுவதை விடுத்து நிதானமாக செயற்படுவதுதான் ஒரு மு.ஃமினின் பண்பாக இருக்க முடியும்.

இவ்வடிப்படையில், சந்தையில் பல வருடங்களாக உலா வந்து கொண்டிருக்கும் பிரமிட் வியாபாரக் கட்டமைப்பு முறைமை பற்றிய ஷரீஆவின் சட்டத்தை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்

**பிரமிட் வியாபார கட்டமைப்பு முறைமை**

பிரமிட் கட்டமைப்பு வியாபார முறைமை குறித்து இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட "பிரமிட் திட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட அபாயமும், வலையமைப்பு சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் - 2006, இல.4 எனும் சிற்றேட்டுத் தொடரில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது :

இத்திட்டத்தில் புதிதாக பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிகமாக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டுவரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

**பிரமிட் வியாபார கட்டமைப்பு முறையின் இயல்புகள்:**

1. இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிதாக பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது வேலைகளை கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்யுமாறு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்களை அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களை கொண்டுவருமாறும் வேண்டப்படுகின்றனர்.

2. சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளரூடாக மட்டுமே இவை கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன

3. இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக்கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே காணப்படும். இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடாக கட்டணமாக விதிக்கப்படலாம்.

4. இப்பொருட்களுக்கு இரண்டாந் தரச்சந்தை இல்லாதிருப்பதுடன் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒருபோதும் வழங்கப்படுவதில்லை.

5. பங்குபற்றுபவர்களினால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்ளைப் பெற்றுக் கொள்வதானால் புதிதாக பங்குபற்றுபவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலே தங்கியிருக்கின்றது.

6. இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.

7. பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை

8. ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் சட்டரீதியாக மாதாந்தம் 'ரூ 100,000 இனைப் பெறுதல்) அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை" "இலகுவாக ஆட்களை சேர்துக்கொள்ள முடியும்" போன்ற நன்மைகளைப்பெற முடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.

9. திட்டத்தின் அடிமட்டத்தில் இருக்கும் புதிதாக பங்கு பற்றியவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்ய முடியாத நிலை எழும் போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.

10. செயற்பாட்டுப் பிரதேசங்கள் பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வறையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக் களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

**பார்க்க:**

இலங்கை மத்திய வங்கியின் பிரமிட் திட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட அபாயமும், வலையமைப்பு சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் - 2006, இல.4

**தினகரன் வாரமஞ்சரி, 2011.08.07 – பக்கம் :12**

பிரமிட் வியாபாரக் கட்டமைப்பு முறைமையின் வகைகள்:

பிரமிட் வியாபார கட்டமைப்பில் இரண்டு முறைகள் உள்ளன.

01. வெற்று பிரமிட் கட்டமைப்பு (Naked Pyramid Scheme) என்பது முதலாவது முறைமையாகும். இதன் [illegible] பொருட்கள் இருக்காது. இது வெறும் பணத்தை அடிப்படையாகக் கொண்டது. பணம் செலுத்தி உறுப்பினராகிய பின் பலரை உறுப்பினர்களாக்குவதன் மூலம் பணம் சம்பாதிப்பதாகும்.

02. பொருட்களை அடிப்படையாகக் கொண்ட பிரமிட் கட்டமைப்பாகும். இதற்கு Multi-Level அல்லது Network Marketing Scheme என்று செல்லப்படும். இதில் உறுப்பினராகுவதற்கு குறிப்பிட்ட பொருளை வாங்குதல் வேண்டும்.

(பார்க்க: இலங்கை மத்திய வங்கியின் "பிரமிட் திட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட அபாயமும், வலையமைப்பு சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் - 2006, இல.4)

பிரமிட் வியாபார கட்டமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

மத்திய வங்கியின் அறிக்கைப்படி, இவ்வியாபார முறைமை இந்நாட்டில் தடை செய்யப்பட்ட ஒன்றாகும் என்பதுடன் இத்திட்டத்தில் பங்குபற்றி குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது ஒரு மில்லியன் 'ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரமிட் மற்றும் வலையமைப்பு வியாபார முறை (Network Marketing) தொடர்பான ஷரீஆவின் கண்ணோட்டம்

பிரமிட் மற்றும் வலையமைப்பு "Naked Pyramid Scheme" மற்றும் "Network Marketing / Multi Level" வியாபார முறைமை குறித்து கருத்து வேறுபாடுகள் நிலவிய போதிலும் சமகால இஸ்லாமிய அறிஞர்களில் பெரும்பாலானோர் இதனை ஹராம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளனர். இஸ்லாமிய பொருளியல் துறை அறிஞர்களும் இவ்வியாபார முறைமை ஆகுமானதல்ல என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஹராம் எனக் கூறும் அறிஞர்கள் பின்வரும் நியாயங்களை முன்வைக்கின்றனர்

1. வட்டியின் இயல்புகளைக் கொண்டிருக்கின்றமை. ஏனெனில், அதிகளவு பணம் சம்பாதிக்கும் நோக்கில் குறைந்தளவு பணம் செலுத்தப்படுகின்றது. விற்கப்படும் பொருட்கள் பணம் கைமாற்றப்படுவதை மறைப்பதற்கான ஒரு யுக்தியாகும். உண்மையில் இப்பொருட்களை வாங்கும் நோக்கம் இருப்பதில்லை. மாறாக, அதில் உறுப்பினராகி அதிக பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒரு பொருளை கொள்வனவு செய்யும் பொழுது அதன் நோக்கத்தையும் அவதானித்தல் வேண்டும் என்று இமாம் இப்னு ஹஜர் அல்ஹைதமி ரஹிமஹுல்லாஹ் துஹ்ஃபாவில் குறிப்பிடுகின்றார்கள்.

2. ஒருவகை ஏமாற்றமும் குளறுபடியும் காணப்படுகின்றது. ஏனெனில், இதில் இணைபவர்கள் அதிக இலாபமீட்டலாம் அல்லது ஈட்ட முடியாமலுமாகலாம் என்ற நிச்சயமற்ற தன்மை உள்ளது. என்றாலும், அதிகமானோர் இதில் வெற்றியடைவதில்லை.

நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஏமாற்று வியாபாரத்தைவிட்டும் தடை செய்துள்ளார்கள். நூல் : ஸஹீஹு முஸ்லிம்

ஏமாற்றம் என்பது (அதில்) இரண்டு விடயங்கள் சாத்தியமானதாக இருக்கும் அவற்றில் பொரும்பாலும் அச்சுறுத்தலே மேலோங்கியிருக்கும்.

(நிஹாயதுல் முஹதாஜ்)

3. பொது மக்களின் சொத்து, செல்வங்களை அநியாயமாக சுரண்டும் வகையில் இவ்வியாபார முறைமை அமைந்திருக்கின்றமை. இவ்வியாபார ஒழுங்கில் ஆரம்பத்தில் இணைந்து கொள்கின்றவர்கள் அவர்களுக்குக் கீழால் இத்திட்டத்தில் இணைந்து கொள்பவர்களின் உழைப்பின் மூலம் கூலியையும் பெற்றுக் கொண்டு அதிகளவில் இலாபமும் அடைவர். கம்பனி கொள்ளை இலாபம் பெறும். இத்திட்டத்தில் கடைசியாக இணைந்து கொள்கின்றவர்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்படுவர்.

அல்லாஹ் தஆலா அல்-குர்ஆனில் "உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்." (அல்-பகரா:188) என்று கூறுகின்றான்.

4. இதில் ஈடுபடுவர்கள் மற்றவர்களைக் கவர்வதற்காக பல பொய் வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றுகின்றனர்.

5. சிலர் இதனை இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட தரகு வியாபார முறையுடன் ஒப்பிடுகின்றனர். ஆனால் தரகு வியாபார முறையுடன் இது முரண்படுகிறது. ஏனெனில், தரகு வியாபார முறையில் தரகர் பொருளை கட்டாயமாக கொள்வனவு செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுவதில்லை. ஆனால், வலையமைப்பு மற்றும் பிரமிட் முறைகளில் தரகர் கட்டாயமாக பொருளைக் கொள்வனவு செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

எனவே, இவ்வியாபார முறைமையில் சந்தேகத்துக்கிடமான, மயக்கமான பல விடயங்கள் இருக்கின்ற அதேவேளை, இது ஒரு வகையான வட்டி, சூதாட்டம், மோசடி, ஏமாற்றம் போலத் தோன்றுவதனாலும், வியாபார ஒழுங்குகள் பேணப்படாதிருப்பதனாலும் இவ்விடயத்தில் ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வை அஞ்சி தவிர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் ஹராத்தில் வீழ்ந்து எம்மையே நாம் அழித்துக் கொள்ளும் நிலை உருவாகும்.

வலையமைப்பு (Network Marketing) மற்றும் பிரமிட் வியாபார முறைமைகள் ஹராமென தீர்ப்பு வழங்கிய ஃபத்வா நிலையங்கள் சில பின்வருமாறு:

1. சவுதி அரேபியாவின் கல்வி, ஆய்வு, ஃபத்வாவுக்குமான ஒன்றியம் (ஃபத்வா இல:22935)
2. சூடானிலுள்ள இஸ்லாமிய ஃபிக்ஷ் மையம்
3. ஜோர்தான் இஸ்லாமிய ஃபத்வா நிலையம், (ஃபத்வா இல:1995)
4. லாமிய சட்ட மையம், இந்தியா (ஃபத்வா 16.ஃ4)70
5. கட்டார் இஸ்லாமிய ஃபத்வா நிலையம் (islamweb.net ஃபத்வா (35492)
6. எகிப்தின் ஃபத்வா நிலையம் (ஆரம்பத்தில் பல நிபந்தனைகளுடன் இவ்வியாபாரத்தை அனுமதித்த இந்நிலையம் தற்பொழுது கூடாது என்று பத்வா வழங்கியுள்ளது) (ஃபத்வா இல:3861)
7. ஃபத்வா நிலையம், தாருல் உலூம் கராச்சி - பாகிஸ்தான்

**எல்லாம் வல்ல அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கு

## இலத்திரனியல், சின்னத்திரை, கலை

நவீனம், பின் நவீனம் கொள்கைகள், கோட்பாடுகள், புதியன வேண்டுதல், உலக சந்தை, வர்த்தக வலைப்பின்னல் என புதிய சொற்கள் உருவாகி உலாவத் தொடங்கி அதனை உருவாக்கியவர்களின் கைமீறி அவை அபாரமாக ஆர்ப்பரித்துக் கொண்டு ஒரு உருண்டை சுழல்கிறது. இதில் மூழ்கி முத்தெடுப்பவர்கள் ஒருபுறம் இருக்க கரையில் நின்று கொட்டாவி விடும் அப்பாவிக் கூட்டம் பற்றி யாரும் அக்கறை கொள்ள தயார் இல்லை. இங்கு இன்னுமொரு கூட்டமும் உலாவுகிறது. சட்டைப்பையில் விரல் விட்டு துலாவித் துலாவி ஆசைகளை பட்டியல் படுத்தும் கூட்டம். தன் சட்டைப்பையின் மொத்த அளவிற்கே அவர்களது ஆசைகளை வளர்க்கும் பகுதியினர். இந்த மூன்று பகுதியினரையும் தான் நாம் பூ வைத்து பொட்டு வைத்து கௌரவமாக சொல்கிறோம் உயர்வர்க்கம், அடிநிலை வர்க்கம், நடுத்தர வர்க்கம் என. இது இந்தத் தலைமுறை கண்டு கொண்டிருக்கும் உலகம். இதன் அடுத்த கட்டமாக எமக்கு தெரியாமல் எங்கோ ஒரு மூலையில் இன்னுமொரு உலகம் சரிக்கட்டப்பட்டு வருகிறது. அது இனி வரப்போகும் தலைமுறைக்கானதாய் அமையும். ஒன்றின் முடிவிலும் அடுத்ததின் ஆரம்பத்திலும் நின்று உலகை காணப்போகும் அந்த கெட்ட கஷ்ட காலத்தை அனுபவிக்கும் பாக்கியம் எம்மில் எவருக்கு வரப்போகிறதோ தெரியாது. மேற்கூறிய உலகத்தினுள் நான் சொல்லப்போகும் சின்னத்திரை உலகம்போடும் கூத்தும் கும்மாளமும் தான் இன்றைய பேசுபொருள். இது பலர் பேசிய பொருள் தான்.

எனது நண்பன் ஒருவனின் வீட்டில் ஒரு நாளைக் கழிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. வீட்டில் எட்டு பேர் இருப்பதாக நண்பனோடு உரையாடும் போது தெரிந்து கொண்டேன். ஆனால் ஒன்பதாவதாய் ஒரு நபர் நான் போனதில் இருந்து பேசிக்கொண்டிருந்தார். எல்லோரும் அவருக்குத் தான் முக்கியம் கொடுத்தனர். அவர் ஓர் உயிர் அற்ற ஒரு மின்சாரப்பெட்டி. அதற்கு இவ்வளவு முக்கியத்துவமா? அதன் பிரதிபலிப்பொன்றை அன்றிரவே கண்டேன். குடும்ப தலைவருக்கும் தலைவிக்குமிடையே அன்புச்சண்டை ஒன்று நிகழ்ந்தது. உடனே அவர்களது பத்து வயது இருக்கக்கூடிய மகள் அன்பாய் சொன்னால் "___________ நாடகத்தில் வருவது போல அப்பாவை டைவஸ் பண்ணுங்க அம்மா" அவர்கள் அனைவருக்கும் அது அருமையான ஜோக் போல சிரித்து மகிழ்ந்து கொண்டனர். இங்கு விடப்பட்ட இடைவெளியில் உங்களுக்கு விரும்பிய நாடகங்களின் பெயரை போட்டுக் கொள்ளுங்கள். இன்று எந்த சின்னத்திரை நாடகத்தை எடுத்துக் கொண்டாலும் டைவஸ், பொலிஸ் நிலையம் மாமியார் மருமகள், இரண்டு மனைவி அல்லது இரண்டு கணவர், கள்ளக்காதல், கடத்தல் இவை இல்லாது இயங்கவே இயங்காது. இதனை குடும்பத்துடன் இருந்து குதூகலமாக ரசித்து மகிழ்வர், "டைவஸ்" என்பதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டிய வயதா அது! பத்து வயது சிறுமி உச்சரிக்க வேண்டிய சொல்லா அது. இது ஒரு வலைப்பின்னல் தவறு எனலாம்.

தவறுவிட்டது பத்து வயதுச் சிறுமி அல்ல. வியாபாரம், நேரம், நிறுவனம், குடும்பம், சமூகம், பொருளாதாரம், விளம்பரப்படுத்தல் என ஒரு தொகைப்பட்ட விடயங்கள் பிணைந்த இயக்கமே இதற்கு காரணம். மேற்கூறிய விடயங்களை ஒரு பகுதி இழப்பதனால் மற்றைய பகுதி லாபமீட்டுகிறது. இது யாருக்கும் தெரியாமல் திட்டமிடப்பட்டு செய்யும் பண்பாட்டுக் கொலை. இதன் முதலாளி, முதலாளித்துவ சிந்தனை என்பதே மெய்.

எத்தனையோ ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் தெருவிலே நாயோடு நாயாக படுத்து கிடக்கும் ஒருவனை இயக்கும் வல்லமை கொண்ட "ரிமோல்ட்" ஒருவரிடம் தான் இருக்கிறது. இது ஒரு வகைச் சுரண்டல் என்பதை யாரும் உணர்ந்து கொள்வதில்லை. அதற்கு இடமளிக்காத வகையிலேயே இது வடிவமைக்கப் பட்டுள்ளது. இன்னுமொரு உதாரணம் சொல்ல முடியும் கிரிக்கட் போட்டி. போட்டி ஆரவாரம், விளம்பரம், கோலாகலமாக நடக்கிறது. நாங்கள் இங்கிருந்து கைதட்டி ரசிக்கின்றோம். அங்கு கோடிக்கணக்கில் பந்தயங்களும் லாபமீட்டலும் நடக்கிறது. நாங்கள் பந்தயக்குதிரைகள் ஆக்கப்படுகின்றோம். இந்த வியாபாரம் தான் சின்னத்திரையிலும் நடக்கின்றது. வீடு தேடி வந்து எமது பண்பாட்டை சுரண்டிக்கொண்டு போகின்றார்கள். அதற்கான தாராளமான இடத்தினை நாங்கள் விட்டு வைத்திருக்கின்றோம் என்பது உண்மை தானே. அவர்களுக்காக எமது கதவு எப்போதும் திறக்கிறது என்பது தான் கேவலமான உண்மை.

அருமையான கலை வடிவத்தினை அபாயம் மிக்க ஒன்றாக மாற்றிக் கலையை விபச்சாரம் ஆக்கும் சக்திகளை இனங்கண்டு விடுதலைக்கான ஒரு வழியை நாமாகத்தான் கண்டு கொள்ள வேண்டும். அரங்கக் கலையில் நின்று தொழினுட்ப வளர்ச்சியின் மேம்பாடாக இலத்திரனியல் செல்வாக்கு செலுத்துமளவுக்கு இந்த சின்னத்திரை கலை வடிவங்கள் எழுச்சி பெற்றுள்ளது. இதனூடாக சமூகத்துக்குச் சாதகமான கலைகளை விதைப்பதை விட்டு அபாய மான உலகம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டியவர்களில் மற்றுமொரு முக்கியமானவர் ஊடகம். இது ஊடகம் மீதான பழிச் சொல் அல்ல. ஒரு தேசத்தின் மீதான பழிச்சொல்லினை இல்லாமல் செய்யும் பெரும் பங்கு ஊடகத்தை சாரும். மக்களை தம் பக்கம் திரட்டுவது மட்டுமே நோக்கமாகக் கொண்டிராது மக்களை மாற்றுபவர்களாக இருக்க வேண்டும். அந்த சக்தியும் அவர்களுக்கே தான் உள்ளது. தொலைக்காட்சி ஊடகங்கள் சின்னத்திரை நாடகங்களை போட்டி போட்டு வாங்கிக் கொள்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பெரு நேரத்தினை நாடகங்கள் தான் ஆட்சி செய்கின்றது. எமது பண்பாட்டு கலைகளுக்கு எந்தளவுக்கு இந்த ஊடகங்கள் நேரம் ஒதுக்குகின்றது? ஆகவே இவர்களது பங்கும் இங்கு செல்வாக்கு செலுத்துகின்றது.

மனிதர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இந்த இலத்திரனியல் பண்பாடு வேர்க் கறையான் போல இளம் பரம்பரையினரை தொற்றி அவர்களது மூளையை பட்ட மரமாக்கி விடுகின்றது. தொலைக்காட்சி நாடகத்தில் ஊறியவர்கள் தமது அன்றாட வாழ்வின் அங்கமாக அது சார்ந்த உச்சரிப்புக்களை பயன்படுத்துகின்றனர். அணியும் ஆடையில் இருந்து முகப்பூச்சு நடத்தை பேச்சு என எல்லாவற்றையும் யாரோ ஒருவன் தீர்மானிக்கும் அளவிற்கு உள்ளது. அவ்வளவு ஏன் எமது உணவு நேரத்தை கூட நாடகங்கள் தான் தீர்மானிக்கின்றது. கலை கலைக்காக இல்லை அது மனிதர்களுக்கானது என்ற தத்துவத்தின் பெறுமானம் இங்கு பிறழ்வடையத் தொடங்குகின்றது. கலை கற்பிக்கும் பாடம் என்ன? அது எதை செய்யத் தூண்டுகிறது. அதன் பலாபலன் எது? பழுத்த தலைகள் சிலதும் பருவத்தலைகள் சிலதும் சேர்ந்து முக்கி முனகி எமக்கென்று ஒரு பண்பாட்டையும் கலையையும் கட்டி இழுத்துக்கொண்டு போகும் சந்தர்ப்பம் ஒன்றில் இவ்வாறான போக்குக்கு அணைகட்ட வேண்டிய தேவையை யாரும் சிந்திப்பதாக இல்லை. அது காட்டாறு போல அடித்து பிய்த்துக் கொண்டு எம்மை கழுவி எடுத்துச் செல்கிறது. நாம் அதில் விழுந்து எழும்பி உடம்பில் ஒட்டியுள்ள சேற்றையும் நாற்றத்தையும் வாசனைத்திரவியம் போல ரசித்து கொண்டிருக்கின்றோம். யாரோ காறித் துப்பிய எச்சிலை முகத்தில் இருந்து தொட்டு ரசிக்க எப்படி துணிவு வந்தது? எமக்கு.

-அரங்காலயா பிரதீப்-




## கடல் தின்ற நம் நிலம்

நம் வரலாற்றை தேடிக்கொண்டிருக்கும் எல்லைக்கல் கி.மு 20000 ஆண்டுகளுக்கு முன்னரான நம் வரலாற்றை இவ்வாரத்தில் இருந்து தேடத்தொடங்குகிறது.


இதுவரை இலங்கை தமிழர் வரலாறு என்பது இன்று வரை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் பாளி நூல்கள் மற்றும் சில பிற்கால வரலாற்று குறிப்புக்கள் அடிப்படையாக கொண்டு தான் தீர்மானிக்கப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் ஈழத்தின் வரலாறு சொல்லும் பாளி நூல்களின் காலத்துக்கு முன்னரான எம்வரலாறு என்ன?

இலங்கை வரலாறு கூறுவதாக சொல்லப்படும் பாளி நூல்கள் அனைத்தும் கி.பி 3ம் நூற்றாண்டுக்கு பிறகு நடந்த வரலாற்று விடயங்களைத் தான் கூறுகின்றன. இக்காலப்பகுதிக்கு முன்னரான எம் வரலாற்றை தேட நாம் எந்த காலப்பகுதியை எடுத்துக்கொள்ள போகிறோம் என்ற பிரச்சனை இருக்கிறது.

எதற்கெடுத்தாலும் நாம் 2000, 3000 ஆண்டு பழமையானவர்கள் என்ற பழங்கதையை விட்டு அறிவியல், மானுட ரீதியில் நம் வரலாற்றை தேடினால் என்ன?

உலகில் அநேகமான இனங்களின் உருவாக்கமும் அவர்களின் தாய் நிலங்களும் இனம் காணப்பட்டு விட்டன. ஆனால் தமிழர்களில் உருவாக்கம் இன்னும் வரலாற்றுக்கு சூனியமே. அதிலும் இலங்கை தமிழரின் உருவாக்கம் மற்றும் தாய்நிலம் தொடர்பான வரலாறு இன்றுவரை மறைப் பெறுமதியில்தான். தமிழர் (திராவிடம்) என்ற இனம் உலகில் தோன்றிய முதல் குடி என்பதால் என்னவோ அவர்கள் உருவாக்கத்தை தேடினால் தேடல்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.




ஆனாலும் வெளிநாட்டு ஆராய்ச்சியா ளர்கள் நம்முடைய தாய் நிலத்தை அறிவியல் ரீதியாக கிட்டத்தட்ட நிரூபித்த விட்டனர்.

கி.மு.17000 - 10000 காலப் பகுதியில் கடல்கோளினால் அழிக்கப் பட்டு இன்று அமைதியாக கடலுக்குள் உறங்கிக்கொண்டிருக்கும் அன்றைய காலத்தில் பிரமாண்டமாக இயங்கிக் கொண்டிருந்த குமரிக்கண்ட ம்தான் (லெமூரியாக் கண்டம்) அவர்கள் கூறும் நம் தாய் நிலம்.



(இன்னும் நடுவோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக்கேள்வி – எவ்வாறு ?

கடந்த 09.09.2012ன் இறுதியில் தழிழர் பிரச்சனைக்கான தீர்வை எட்டும் கலந்துரையாடல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது தந்திரோபாயங்களை எவ்வாறு நகர்த்தப்போகின்றது என்பதைத் தீர்மானிக்கும் ஐந்து காரணிகளாக அதன் பலம், பலவீனம், வாயப்புக்கள் பயமுறுத்தல்கள் என்பவற்றுடனான பாதுகாப்புத் திட்டமிடலும் சேர்ந்து நிற்கின்றன எனப் பார்த்தோமும். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான பலம் என்ன என்பதையும் அதற்கான மூலவூற்றுக்கள் என்ன என்பதையும் சற்று ஆராய்வோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தின் முக்கிய காரணியாக அமைவது ஐந்து கட்சிகளின் ஒன்றமைப்பு ஆகும். அவ்வைந்து கட்சிகளின் ஒன்றமைபபையும் மிகச் சாதுரியமாக நகர்த்திச் செல்வதில் அதன் தலைவர் சம்பந்தன் அவர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். சாதாரணமாகவே ஒற்றுமை வாழ்வில் திருப்தியடையாத தமிழர்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம். எனில் ஐந்து வேறுபட்ட நோக்கங்களைக் கொண்ட தமிழ்த்தலைமைகளைக் கொண்ட கட்சிகளை ஒரே அச்சில் சுழற்றுவது ஒன்றும் இலேசான விடயமல்ல. என்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும் பலமாகத் திகழ்வது இவ்வைந்து கட்சிக் கட்டமைப்பே. எனவே இப் பெரும் பலத்தைக் கட்டிக் காப்பதற்கு அவ்வைந்து கட்சித் தலைமைத்துவங்களும் பெரும் விட்டுக்கொடுப்புக்களுக்குத் தயாராயிருக்க வேண்டியிருக்கும். அத்துடன் இவ்வொற்றுமைக்கே தமிழர்களின் வாக்கு என்பதை அத் தலைமைகள் ஒன்றும் உணராமலில்லை. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போன எவரும் இன்றுவரை தமிழர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காலம் எமக்கு கற்றுத் தந்துள்ளது. அதற்கான உதாரணங்களாகச் செ. கஜேந்திரகுமாரின் கட்சியையும், பா. தங்கேஸ்வரியின் கட்சியையும் நாம் கருத்திற்கொள்ளலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைப் பாதுகாப்பதில் அதன் தலைமைத்துவங்களை விட மக்களின் வாக்குகளின் பலமே மிக முக்-கியமாயிருப்பது கண்கூடு.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமாகக் கொள்ள வேண்டியது பெரும்பான்மைத் தமிழர்களின் விருப்புக் கட்சியாக அவ்வமைப்பு மிளிர்வதே ஆகும். எவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்காளராக நிறுத்தினாலும் அவருக்கு வாக்களிக்கத் தமிழர்கள் தயாராயிருப்பதை நாம் காணலாம். அதனை நாம் பெரும் பலமாக கொள்ளலாம். தமிழர்களின் தீர்வு என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பெற்றுத் தரும் எனும் வேறு வழியின்றிய நம்பிக்கையே இப்பலத்தின் அடித்தளமாகியுள்ளது. இந் நம்பிக்கையினால் அரசியற் கட்டமைப்புக்குள் உருவாகியுள்ள உள்ளூராட்சி அமைப்புக்களின் பெரும்பான்மை அமைப்புக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்வசமாக்கியுள்ளதுடன், தமிழருக்கான பாராளுமன்ற அங்கத்துவத்தின் பெரும்பான்மையை தம்மகத்தே வைத்திருக்கின்றது.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் "பயங்கரவாத முகம்" மே மாதம் 2009ல் இல்லாதொழிக்கப் பட்டவுடன் அவ்வமைப்பு பட்டவர்த்தனமான அரசியலமைப்பாக, சுதந்திரமான அரசியற் தலைவர்களைக் கொண்ட அமைப்பாக அனைத்துத் தரப்பாலும் எண்ணப்பட்டு விட்டமையைப் பலமாகக் கொள்ளலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது தமிழர்களின் ஆயுத விடுதலைப் போர்த் தலைவரின் தீர்க்கதரிசனத்தால் உருவாக்கப்பட்டமையை எவரும் மறந்துவிட முடியாது. தமிழர் விடுதலைப் போரின் சர்வதேச முகம் பயங்கரவாதத் தோற்றம் கொண்டதனால் அவர்களின் தீர்க்கதரிசனத்தால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் மெலிதான போர்முகப் பரவலை தவிர்க்கமுடியாதிருந்த காலங்கள் இருந்தன. அப் பரவலால் சில சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியகச் சக்திகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவோ அல்லது அவை தொடர்பான ஆரம்பக் கட்ட முயற்சிகளை மேற்கொள்ளவோ முனைந்த போது அவற்றைப் பேரினவாத சக்திகள் மிக இலகுவாக பயங்கரவாதச் சாயத்தைப் பூசித் தடுத்துவிட்டிருந்தன. அவ்வாறே உண்மை நிலைமைகளை உலகிற்குப் பறைசாற்றத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைந்த போதும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் ஊதுகுழலே" எனக் கத்திய பேரினவாதத்தின் முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்விகளையே சந்தித்திருந்தது. தற்போது பூரணமான, சாயமற்ற தமிழரின் அரசியற் பேசும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியிருப்பது பலமான நிலையை அவ்வமைப்பிற்கு உருவாக்கியுள்ளது.

அடுத்து ஒன்றமைக்கப்பட்ட கட்சிகளிடமிருந்து பல்வேறுபட்ட ஆளுமைகள்(Personalities) ஒன்றாகியிருப்பதைப் பலமாகக் குறிக்கலாம். பழுத்த மூத்த அரசியல் அறிஞர்கள், அசராத நியாயவாதிகள், ஆயதப்போரிலீடுபட்ட பின் அவ்வறிறோடு அரசியலுக்குள் நுழைந்திருப்பவர்கள், சட்டத்துறையிலிருந்தும், ஊடகத்துறையிலிருந்தும் வந்திருப்பவர்கள், முள்ளிவாய்க்கால் பேரவலத்தை மக்களோடு பகிந்தவர்கள் எனப் பலதரப்பட்ட ஆளுமைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மகத்தே கொண்டுள்ளது. திரு சம்பந்தர், மாவை சேனாதிராசா போன்றோர் பழுத்த அரசியல்வாதிகளாக இருக்கின்றார்கள். அவர்களுடன் மூத்த அரசியல்வாதியும் "தவறைத் தவறென" சுட்டிக் காட்டிக் கொண்டேயிருந்ததால் அரசாலும், விடுதலைப் போராளிகளாலும் குறிவைக்கப்பட்டிருந்த, ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்பால் பரிசளிக்கப்பட்ட அசராத நியாயவாதியான ஆனந்தசங்கரி அவர்களும், ஆயதப்போரின் பின் அரசியலுக்கிணைந்துள்ள சுரேஸ், விநோ போன்றவர்களும், சட்டத்துறையிலிருந்து உள்ளீர்க்கப்பட்ட சுமந்திரனும், ஊடகத்துறையிலிருந்து உள்வாங்கப்பட்ட சரவணபவனும் இருப்பதுடன், இறுதிவரை மக்களோடு மக்களாக நின்று முள்ளிவாய்க்கால்ப் பேரவலத்தின் பின் முகாம் வாழ்வைக் கடந்து இன்று வடக்கின் பெரும்பாலான மக்கள் போராட்டங்களைத் தலைமையேற்றிருக்கும் சிறீதரனும் பல்வேறான ஆளுமைகளைத் தம்முள்ளே முகிழ்த்திருப்பது பலமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரணமாய் அமைகின்றது.

இவ்வகையான பெரும் பலத்தைத் தம்மகத்தே வைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலவீனங்கள் எவையாக இருக்கலாம் என........................

அடுத்த வாரம் பார்க்கலாம்

– மாயன் –

---

## முரசின் உலக வலம்

### லிபியாவிலிருந்து ஆயுதங்களைப் பெறும் காஸா - இஸ்ரேல் காட்டம்



கடந்த வருடம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட கடாபியின் படைகளிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை காஸா பெற்றுள்ளதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. அதன் வெளிப்பாடாகவே கடந்தவாரம் இல்ரேலியா உலங்குவானூர்தி மீது மேற்கொள்ளப்படட ஏவுகணைத் தாக்குதல் அமைந்துள்ளது என இஸ்ரேலியப் பாதுகாப்புப் பிரிவு கருத்து வெளியிட்டுள்ளது. இவ்வேவுகணைத் தாக்குதலால் இஸ்ரேலிய உலங்கு வானூர்திக்கு எதுவும் நிகழாத போதும் இஸ்ரேலிய விமானப்படை தொடர்ந்து காஸாப் பள்ளத்தாக்கில் வான் தாக்குதல்களைத் தொடுத்துள்ளது. அவ் வான் தாக்குதல்கள் இருவுகளில் நிகழ்வதால் சரியாக இலக்குகள் தாக்கப்படுவதில் சந்தேகம் நிலவுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### சீனப் பொருளாதார வளர்ச்சி வீதம் வீழ்ச்சி

ஐரோப்பிய நிதி நெருக்கடியாலும், அமெரிக்கப் பொருளாதாரம் மிகச் சாவதானமாக சாதாரண நிலைக்குத் திரும்புவதாலும் சீனப் பொருளாதாரவளர்ச்சி கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது இக் காலப்பகுதியில் 0.2 வீத வீழ்ச்சியைப் பதிந்துள்ளது.

எனினும் ஆய்வாளர்களின் கூற்றுப்படி சீனப் பொருளாதாரம் தளம்பலிலிருந்து உறுதிநிலைக்கு மாற்றமடைவது தெரிவதாக கூறியுள்ளனர். சீனப் பொருளாதார வளர்ச்சியைக் கடந்த சில வருடங்களாக ஏற்றுமதித் துறை, உற்பத்தித் துறை மற்றும் கடன் முதலீடு போன்றவையே ஊக்குவித்து வந்துள்ளன.

### முதியவரை : சிறுவன்.

ஐக்கிய இராச்சியத்தில் 65வயது முதியவரை 15 வதான சிறுவன் ஒருவன் வன்புணர்வுக்குள்ளாக்க முயற்சித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இச்சிறுவன் ஏற்கனவே இரண்டு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளார். இச்சிறுவனுக்கான தண்டனையை எதிர்வரும் 16ம் திகதி நீதிமன்றம் வழங்கவுள்ளது.

### ஜப்பானிய பெண் வன்புணர்வு அமெரிக்கக் கடற்படையினர் கைது.



ஜப்பானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவப் படையால் ஜப்பானிய பெண் ஒருவர் பாலியல் வன்புணர்விற்குள்ளாகியுள்ள விடயம் தொடர்பாக அரசு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. தற்போது தடுப்புக்காவலில் உள்ள 23 வயதான அமெரிக்க கடற்படையினர் இருவரும் அதிகாலையில் பெண் ஒருவரைத் தாக்கிக் காயமடையச் செய்து வன்புணர்ந்ததாக ஜப்பானிய காவல்துறை அறிவித்துள்ளது.

1995ல் ஜப்பானிய 12 வயதுச் சிறுமியை மூன்று அமெரிக்கப்படையினர் வன்புணர்ந்ததும், 14 வயதுச் சிறுமியை 2008ல் அமெரிக்கப் படைவீரன் ஒருவன் வன்புணர்ந்ததும் முன்னர் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குடிபோதைப் பயணியால் தரையிறங்கிய விமானம்

கடந்த 15ம் திகதி பொஸ்ட்ணிலிருந்து புறப்பட்ட விமானமொன்றின் சிறகில் தீப்பிடித்து விட்டதாக பயணியொருவர் கதறியதால் விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் மீண்டும் தரையிறங்கியது.

உக்ரேணியப் பயணியொருவரே இவ்வாறு கதறியதை வெளிப்படுத்திய விமானப் பணியாளர்கள் விமானம் தரை தொட்டவுடன் அப் பயணி மிகக் குடிப்போதையில் இருப்பதைத் தாம் அறிந்கொண்டதாக மேலும் விமானப் பணியாளர்கள் தெரிவித்திருந்தனர். விமானத்தைப் பரீசிலித்த போது அவ்வாறு தீப்பற்றவில்லை என்பதை அறிந்தவுடன் அப்பயணியை காவல்துறையிடம் கையளித்துவிட்டு ஏனையோருடன் விமானம் பொஸ்டனிலிருந்து புறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பயணமும் இறுக்கமாகும் முடிச்சுக்களும்!

மாயன்

இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு அமைதியாய் வீடு திரும்பியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்தியப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டுள்ளதாக அப்பயணத்தில் பங்குபற்றிய அனைவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்குச் சிகரம் வைத்தாற் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு சம்பந்தன் அவர்கள் " நாம் மீண்டும் ஏமாற்றப்படக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் ஒரு போதும் துரோகமிழைக்க முடியாது" அதற்கமையவே பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டது எனும் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். இப்பயணத்தில் பங்குபற்றியவர்கள் "தம்மீது எவ்விதமான அழுத்தத்தையும் இந்தியா பிரயோகிக்க வில்லை" எனும் கருத்தை ஒரு சேரப் பிரதிபலித்திருந்தனர். அத்துடன் தமது விளக்கங்களைக் கேட்டவுடன் **இந்தியப் பிரதமரின் போக்கிலும் எண்ணத்திலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்திருந்ததாகவும்** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்திருந்தார். மேலும் சம்பந்தரின் இறுதியான கருத்தாக "இந்தியப் பிரதமர் எம்முடன் மிகவும் **அன்னியோன்னியமாகவும், பண்பாகவும், விசுவாசத்துடனும்** நடந்துகொண்டார்." எனக் குறிப்பிட்டதுடன் இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் விரைவில் மாற்றம் ஏற்படும் எனவும் தனது நம்பிக்கையை சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வளவும் வெளிப்படையாக எமக்குத் தெரிந்த விடயங்களாக இருக்க, இப்பணயம் தொடர்பாக அடிப்படையாக இருக்கும் விடயங்கள் சிலவற்றை ஆராயலாம். முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முன்னரேயே அவ்வமைப்பின் மீது இந்தியா கொடுக்கப்போகும் அழுத்தங்கள் என்ன? என்பதை அரச ஆதரவுப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. அவை முறையே அரசுடன் பேச்சுக்களுக்குத் திரும்புதலும், தெரிவுக்குழுவிற்கு அங்கத்தவர்களை அனுப்புவதும் தொடர்பானவை என அவை அறிக்கையிட்டிருந்தன. இலங்கை சனாதிபதியின் இந்திய விசயத்தின் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை இந்தியா அழைத்திருந்தது. எனவே இவ்வாறு வெளியான செய்திகள் ஊடாக இந்தியாவிடம் இவ்விரு விடயங்கள் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அழுத்தங்களைக் கொடுக்கச்சொல்லியே இலங்கை அரசுத்தலைவர் கோரிக்கை விட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. ஏன் அவசர அவசரமாக செம்டெம்பர்க் கடைசிவாரத்தில் நிகழ்ந்த சனாதிபதியின் பயணத்தின் பின் ஒக்டோபர் இரண்டாம் வாரத்திலேயே இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்திருந்தது என்பது இங்கு கேள்விக்குறியாகி நிற்கின்றது. சரி, அவ்வாறு அழைத்து தமிழர் தரப்பின் நியாயங்களை இந்தியப்பிரதமரும் ஏனைய முக்கியஸ்தர்களும் கேட்டுக் கொண்டதோடு " தமது மனமும் மாறி விட்டதாக" பிரதமரும், "பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு" என வெளிவிவகார ஆலோசகரும் சொல்லித் திருப்பியனுப்பவா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தார்கள் என்பது மிகப் பெரும் சந்தேகத்தை அல்லவா ஏற்படுத்தியுள்ளது. நிற்க!

இலங்கைத் தமிழருக்கு இதுவரைகாலமும் நிகழ்ந்த கொடுமைகள் எதையும் இந்தியா தெரிந்துகொள்ளவில்லை. அதன்பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அரசும் பலசுற்றுப் பேச்சுக்களை நிகழ்த்தித் தோல்வியுற்று திரும்பியதையும் இந்தியா அறிந்திருக்கவில்லை. அதற்குப் பின்னர் கடந்த வாரம் இந்தியா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்துப் பேசிய போதே இதையெல லாம் தெரிந்து கொண்ட ஆசிய வல்லரசின் பிரதமர் தமது மனம் மாறியுள்ளதாக குறிப்பிட்டிருப்பதாகவும், ஆலோசகர் தாம் இனியும் பொறுக்கப் போவதில்லை எனக் கோடிட்டிருப்பதும், தமது பயணத்தின் பின்னர் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வரவுள்ளதாக சம்பந்தன் தம்பட்டம் அடித்திருப்பதும் அனைத்துத் தமிழ்ப் பாமரர்களாலும் எதுவித கேள்வியுமின்றி நம்பப்பட்டு விட்டது தலைவர் அவர்களே!

பிரதமரின் அன்னியோனனியமும், பண்பும், விசுவாசமும் தமிழர்களை ஏமாற்ற முடியாது. ஆனால் இலகுவாகத் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றி விடும் என்பதை இப்பயணம் தெளிவுபடுத்தியிருக்கின்றது. அல்லது எதையோ மறைக்கவே தமிழ்த் தலைமைகள் முயற்சிக்கின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அடுத்த முதலாம் திகதி இந்தியாவின் தலைமையில் ஜெனீவாவில் இலங்கையின் மனிதவிவகாரங்களுக்கான மீளாய்வின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. ஸ்பெயின் மற்றும் பெனின் நாடுகளே ஏனைய இரு அங்கத்தவர்களாகும். இவ் அறிக்கையை இந்தியா இலங்கையைக் கட்டியாளும் கயிறாகத் திரிக்கப் போகின்றது என்பதே உண்மை. அத்துடன் அக் கயிற்றுத் திரிப்புக்கு மற்றோர் நூலாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா கொள்ளப் போகின்றது. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சு மேடைக்குக் கொண்டுவருவதும் வராததும் தன்னிடமே இருப்பதாக முடிச்சை போடவுள்ளது இந்தியா. மேலும் மெதுவாக தென்னாபிரிக்க மத்தியஸ்தத்திற்கும் ஒரு முடிச்சைப் போடவே இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசியுள்ளது. இலங்கைத் தீவில் பாகிஸ்தானிய உளவாளிகள் எனும் நூலை ஏற்கனவே தயாராக்கி இத்திரிப்பில் உட்படுத்தியுள்ள இந்தியா, சீனச் சந்தையை இலங்கையில் இல்லாதொழிக்க தனது பொருளாதார ஜாம்பவான்களை சம்பூரில் நிலைப்படுத்தவும் உள்ளது. இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் வாரத்தில் நிச்சயமாக இந்திய இராசதந்திரி ஒருவர் இலங்கைக்கு பயணம் செய்வதை எதிர்பார்க்கலாம்.

இம் முடிச்சுச்களில் இறுகி வெளிவரும் எச்சங்களிலா தமிழர் தலைவிதி தங்கியிருக்கப் போகின்றது?

## அறிவித்தல்கள்

முருகாபுரி, உப்புவெளி திருக்கோணமலையில் 11 பேர்ச் உறுதிக்காணி [illegible]
தொடர்பு : 07[illegible]

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

01. இரவில் பூக்கும் பூக்களில் ஒன்று
   1. அல்லி 2. நித்தியகல்யாணி 3. சூரியகாந்தி

02. "விவசாயிகள் நெல்லைத் தூற்றி மூடைகளில் கட்டினர்." இவ்வாக்கியத்தில் வரும் செயற்படுபொருள் யாது?
   1. நெல் 2. தூற்றி 3. மூடை

03. மரக்குற்றி எனும் சொல் சரியாகப் பிரித்தெழுதப்பட்டுள்ள முறை யாது?
   1. மர + குற்றி 2. மரக் + குற்றி 3. மரம் + குற்றி

04. எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் அவதானித்துக் கிரகிக்கும் திறமை கொண்டவன்
   1. தசாவதானி 2. சதாவதானி 3. அட்டாவதானி

05. பின்வருவனவற்றுள் அஃறினைப் பலவின்பாற் பன்மை படர்க்கை எதிர்காலச் சொல் ஒன்றைக் குறிப்பது?
   1. இறந்தன 2. பாடுகின்றன 3. உறங்கும்

06. திருக்கோணமலையில் மண்ணில் இருந்து கனிப்பொருட்கள் பெறப்படும் இடங்களில் ஒன்று
   1. புல்மோட்டை 2. தம்பலகாமம் 3. சாம்பல்த்தீவு

07. மிகக் கூர்மையான பார்வையுடைய பிராணி எது?
   1. கழுகு 2. மயில் 3. யானை

08. மண் இடைவெளி அதிகம் கொண்ட மண் எது?
   1. இருவாட்டி மண் 2. களி மண் 3.மணல் மண்

09. 50 ரூபாய்களில் எத்தனை 50 சதங்கள் உண்டு?
   1. 100 2. 50 3. 20

10. ஒரு பிள்ளைக்கு ஆறு கொப்பிகள் வீதம் 72 கொப்பிகளை எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்கலாம்?
   1. 10 2. 432 3. 12

11. இரு மாதங்களுக்கொரு முறை நடைபெறும் அரங்காடல் எனும் நிகழ்வுக்கு ரூபா 7500 தேவைப்படின், ஒரு வருடத்திற்கு அந்நிகழ்வை நிகழ்த்த தேவையான தொகை எவ்வளவு?
   1. ரூபா 45000 2. ரூபா 90000 3. ரூபா 30000

12. சதுரமுகி ஒன்றினது உச்சிகளினதும், விளிம்புகளினதும், முகங்களினதும் கூட்டுத்தொகை யாது?
   1. 20 2. 26 3. 16

13. இராமன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்ற பின் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்ற பின் இறுதியில் இடது கைப்பக்கம் திரும்பினான். இப்போது இராமன் எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?
   1. வடக்கு 2. மேற்கு 3. தெற்கு

14. 20 L எரிபொருள் தாங்கியைக் கொண்ட வாகனம் ஒரு லீற்றர் எரிபொருளில் 35km தூரம் செல்லக்கூடியது. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 180 எனின், 350 km தூரம் செல்வதற்கு தேவையான எரிபொருளின் விலை யாது?
   1. ரூபா 800 2. ரூபா 1800 3. ரூபா 6300

15. ஒரு விவசாயிக்கு தனது வயல் வெளியின் வாய்க்காலில் 1/6 பங்கை வெட்டுவதற்கு 3 நாட்கள் தேவைப்படுமெனின், வாய்க்கால் முழுவதையும் வெட்டி முடிக்க தேவைப்படும் நாட்கள் எத்தனை?
   1. 15 நாட்கள் 2. 18 நாட்கள் 3. 81 நாட்கள்

16. 1Kg சீனியின் விலை ரூபா 100 ஆகும். 1Kg 750g நிறையுள்ள சீனியின் விலை யாது?
   1. ரூபா 125 2. ரூபா 75 3. ரூபா 175

17. 1Kg அரிசியினதும் 1 Kg பருப்பினதும் விலைகள் முறையே ரூபா 110, ரூபா 60 ஆகும். அச்சுதன் கடைக்குச் சென்று 500g அரிசியும், 1Kg 250g பருப்பும் வாங்கிவிட்டு ரூபா 150 கொடுப்பாராயின், கடைக்காரன் அவருக்குக் கொடுக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
   1. ரூபா 20 2. ரூபா 167.50 3. ரூபா 80

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைச் சொந்தக்காரர்கள் - கட்டைபறிச்சான் விபுலானந்தா வித்தியாலய மாணவர்கள்.



சில வேளைகளில் மிக முக்கியமான விடயங்கள் சற்று காலம் பிந்தி நடத்தல் கூட நன்மைக்காகத்தான் இருக்கிறது. மலைமுரசு தனது வாகர் விரிவாக்கத்தை வாரவாரம் செய்து வருகின்ற இத்தருணத்தில் கட்டைப்பறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்தில் குழு இசையில் தேசிய ரீதியில் சாதனை பெற்ற மாணவர் குழுவை காணும் வாய்ப்புக் கிடைத்ததுடன் அவர்களை இப் பத்தியில் அறிமுகம் செய்யும் வாய்ப்பும் கிடைத்தது.


சுமார் 252 மாணவர்களை கொண்ட இப்பாடசைலை தற்போது அதிபர் புண்ணியமூர்த்தி பிரபாகரன் தலைமையில் பல தரப்பட்ட வெற்றிகளை பெற்றுவருகிறது. இயல்பாகவே கலைகளில் ஆர்வம் கொண்ட இப் பகுதி மக்கள் வழிவழியாக கலைகளின் கடத்தல்களை தமது எதிர்கால சந்ததிக்குச் செய்து வருகின்றார்கள் . இவ்வாறான கலையோங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களான சுஜாதர்,ஆனந்தபவன்,ருதுஷா, மதுஷா, கீதபவன்,தீபிகா, ஸ்ரீதர்சனா, மதுபாசினி ,சாருஜா,புவிசாந்த் போன்ற மாணவர்களே பிரவு 01 இல் தேசிய மட்ட வெற்றியை இப்பாடசாலைக்கு உறுதி செய்துள்ளார்

"வயற் காட்டு கன்னியம்மா –நீ
வாழவந்த பொன்னியம்மா – "என்ற நாட்டார்

பாடலுக்கே இவர்கள் இவ் வெற்றியை பெற்றுள்ளனர். சங்கீதப் பிரிவிலே உரிய புதிய வாத்தியக்கருவிகள் எதுவுமற்ற நிலையில் தம்மிடமிருந்த சொற்ப வாத்தியங்களையும்,பொறுப்பாளரான யோ.சுதர்சனன், உதவியாளர்களான ஆசிரியர்கள் சோ.ஜீவேஸ்வரி, சிறிதரன் அம்பிகா மற்றும் பெற்றோர்களான கோகுலதாஸ் ரஜனி, அம்பிகைபாகன் போன்றவர்களது உதவியுடன் பாடசாலை அதிபரின் விடா முயற்சியுடனும் மட்டுமே தாம் இந்த வெற்றியை பெற்றதாகக் கூறும் கட்டைப்பறிச்சானின் இக்கலை வாரிகளை மலைமுரசும் வாழ்த்துகிறது.

- செம்பியன் -

நன்றி - முகவெளி



திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில்
வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்
விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள்,திருமண நாள் வாழ்த்துக்கள்,சாதனையாளர் வாழ்த்துக்கள்,
மரண அறிவித்தல்கள்,நினைவு நாட் குறிப்புக்கள்,அந்தியேட்டி அழைப்பிதழ்கள்,பெருநாள் வாழ்த்துக்கள்
போன்றவை இடம்பெற வேண்டுமா?
தொடர்புகளுக்கு
அலுவலகம்-159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103

# இவ்வாரம் மரணத்துள் வாழ்வோம் தொகுப்பிலிருந்து...

## யமன்

காற்று வீசவும்
அஞ்சும் ஓர் இரவில்
நட்சத்திரங்களுக்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று
நான் திகைத்த ஓர் கணம்

கதவருகே யாருடைய நிழல் அது

நான் அறியேன்
அவர்களும் அறியார்
உணர்வதன் முன்பு
அதுவும் நிகழ்ந்தது........

மரணம்

காரணம் அற்றது
நியாயம் அற்றது
கோட்பாடுகளும் விழுமியங்களும்
அவ்வவ்விடத்தே உறைந்து போக
முடிவிலா அமைதி

மூடப்பட்ட கதவு முகப்பில்
இருளில்
திசை தெரியாது
மோதி மோதிச் செட்டையடிக்கிற
புறாக்களை

தாங்கும் வலுவை என்
இதயம் இழந்தது

இளைய வயதில்
உலகை வெறுத்தா
நிறங்களை உதிர்த்தன
வண்ணத்துப் பூச்சிகள்

புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரிய காந்தியாய்
நீர் தொடச்
சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்
நட்சத்திரங்களாய்
மறுபடி அவைகள் பிறக்கும்

அதுவரை
பொய்கைக் கரையில்
அலைகளைப் பார்த்திரு! - சேரன் -

## எல்லாம் தெரிந்தவர்கள்

தோழா,
இன்னமும் உயிர் போகவில்லை
இறுதி மூச்சில் ஒரு வார்த்தை
உன் படத்தைக் காட்டி
தெரியுமா? என்று கேட்கிறார்கள்
இந்த மடையர்கள்
கேட்டுக் கேட்டுக்
களைத்து விட்டனர்
என்மனம் இன்னமும்
களைக்கவில்லை

என்ன புன்னகை உன் படத்தில்
இதனை யார் இவர்களுக்குக் கொடுத்தது
யார் காட்டிக் கொடுத்தது
புலப்படவில்லை

'எல்லாமே எங்களுக்குத் தெரியும்
என்று விட்டு
என்னை
'சொல்! சொல்!!' என்கிறார்கள்

யார் சொன்னது
யார் காட்டிக் கொடுத்தது
புலப்பட வில்லை
ஆனால் ஒன்று
இன்று நான் நாளை நீ
இந்தக் கழுகுகள் நாளை
உன்னையும் சிதைக்கலாம்

நான் ஒன்றும் சொல்லவில்லை -
நீயும் ஒன்றும் சொல்லாதே
ஏனெனில்
'அவர்களுக்குத்தானே
எல்லாம் தெரியுமாம்!'

- கீதப்பிரியன் -

## விடியல்

நிச்சயமற்றுப் போயின
நம் இரவுகள்.
அன்பே!
படுக்கைக்கு போகுமுன்
இறுதி அர்த்தங்களுடன்
பார்த்துக் கொள்வோம்!

குழந்தைகளின் கன்னங்களில்
அழுத்தமான உன் உதடுகளை
ஒரு முறை பதித்துவை,
அப்புறமாய்,
நம் உறவுகளை
ஒரு முறை நினைத்துக் கொள்வோம்!

இறுதியாக
மாறி, மாறி
நம் கண்ணீர்த்துளிகளை
நாமே துடைத்துக் கொள்வோம்!

இந்த இரவில்
நாம் எரியாதிருந்தால்
விடியலில்,
பனி முத்துக்கள் தாங்கும்
தேயிலைத் தளிர்களில்
விரல் பதிப்போம்!

- வண்ணச்சிறகு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### தேசிய குறியிடும் ஆணைக்குழு உள்ளூராட்சிச் சபைகளுக்கு.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான புதிய தேர்தல் முறைக்கமைய தொகுதிகளைப் பிரிப்பதற்கான குறியிடும் ஆணைக்குழுவை அமைச்சர் அதாவுல்லா நியமிக்கவுள்ளார். அனைத்துச் சமூகங்களிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பின் ஆலோசனைகளுக்கு ஏற்பவே இவ்வாணைக்குழு அமைக்கப்படவுள்ளது.

பாரளுமன்றில் இயற்றப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் சட்டச் சீரமைப்பின்பால் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட இவ் ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. இவ்வமைப்பு உள்ளூராட்சிப் பிரதேசங்களைத் தொகுதிகளாக பிரிக்கவுள்ளது. ஒவ்வொரு தொகுதியும் இனவிகிதாசாரத்தையும், நிலப்பிரதேச அளவையும் உள்ளூராட்சியிலுள்ள சனத்தொகையையும் கவனத்திற் கொண்டே தொகுதிப் பிரிப்பை மேற்கொள்ளும்.

### கடற்படை "லயன் – எயார்" விமானச் சிதைவுகளை மீட்கிறது.

இரணைதீவுக் கடலில் கண்டுபிடிக்கப்பட்ட லயன்எயார் விமானச் சிதைவுகளை மீட்கத் தயாராகி வருகின்றது கடற்படை. சிவசுப்ரமணியம் தில்லைராஜ் என்ற புலிகளின் ஆயுததாரியே தான் இவ் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக தெரிவித்ததுடன் எங்கு இவ் விமானம் வீழ்ந்தது எனும் தகவலையும் வழங்கியிருந்தார். September 29, 1998 ல் 48 தமிழ்ப் பயணிகள், 6 விமானச் சிப்பந்திகள், 2 உக்கிரேணிய விமான ஓட்டிகளை இவ் விபத்து பலிகொண்டது.

### கார்த்திகை 21ம் திகதிக்கு முன் உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்பட்டு விடும்

பழைய பாடத்திட்டத்திற்கான பரீட்சை வினாத்தாள் மதிப்பீடு ஒக்டோபர் 8ம் திகதியே ஆரம்பமாகியுள்ள நிலையில் நவம்பர் 21ம் திகதிக்கு முன் வினாத்தாள் மதிப்பீடு நிறைவுறும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளால் க.பொ.த சாதாரணப் பரீட்சையோ அல்லது கடைசித் தவணைப் பரீட்சைகளோ பாதிப்பு அடையாது என்றும் அவர் தெரிவித்தார்

## The Sunday Leader

### அமெரிக்க முன்மொழிவுக்கு எதிராக இலங்கை போராட்டம்

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களால் இலங்கைக்கு எதிராக மீளவும் கொண்டுவரப் படவுள்ள முன்மொழிவுக்கு எதிராக அமெரிக்கா விலுள்ள இலங்கைத் தூதுவராலயமூடாக நடவடிக்கை எடுக்க அரசு தயாரகவுள்ளது. ஏற்கனவே காங்கிரஸில் கொண்டுவரப்படவிருந்த இம் முன் முன்மொழிவை இலங்கைத் தூதுவரா லயம் தடுத்திருந்த போதும் மீண்டும் அம் முன்மொ ழிவு ஜனவரி மாதத்தினுள் காங்கிரஸின் ஒப்புத லுக்கு முன்மெழியப்படும் சாத்தியங்கள் உருவாகியுள்ளன. 2011 மார்ச் கொண்டுவரப்பட்ட முன்மொழிவின் சரத்தின் படி சர்வதேச சுதந்திர பொறுப்புக்கூறும் தொழிநுட்ப அமைப்பொன்றின் ஊடாக இலங்கையில் நடந்தேறியவை விசாரிக்கப்பட வேண்டும் எனும் வாசகம் காணப்பட்டது. எனும் அக்காலத்தில் அம் முன்மொழிவு காங்கிரஸின் முன் வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை. எதிாவரும் சனவரிக்குள் அம்முன்மொழிவு காங்கிரஸ் முன் வைக்கப்படவுள்ளது. அதற்கெதிராக கடும் பிரயத்தனங்களை இலங்கைத் தூதுவராலயம் மேற்கொண்டுள்ளது.

### தனியார் வீதிகள் கொழும்பு மாநகரசபைக்கு சொந்தமாகவுள்ளன

சுமார் 50 தொடக்கம் 60 தனியார் வீதிகளை கொழும்பு மாநகர சபை கையேற்கவுள்ளது. கடும் வீதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கொழும்பு மாநகரின் வீதிப் பேக்குவரத்தை இலகுவாக்கும் பெருட்டே இந் நடவடிக்கை அமையவுள்ளது. 2013ன் மாநகரசபைப் பாதீட்டின் ஊடாக இப் பிரத்தியேக வீதிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் மாநகரசபையுடன் தெடர்புகொள்ளாமல் நகர அபிவிருத்தி அதிகாரசபை தன்போக்கில் சில அபிவிருத்தித் திட்டங்களை கொழும்பில் நடாத்துவதாகவும் மாநகர சபை தெரிவித்துள்ளது.

### யாழில் விசேட கூட்டம்.

உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் தனியார் காணிகளில் காணிகளில் இராணுவ அத்துமீறிக் குடியேற்றம் போன்றவை தொடர்பான விடயங்களை ஆராய விசேட கூட்டமென்று எதிர்வரும் மாதத்தில் நிகழவுள்ளது. மாவட்ட அபிவிருத்திக்கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களிள் பின்னரே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா மற்றும் வடமாகாண ஆளுனர் G.A.சந்திரசிறி ஆகியோர் கலந்து கெள்ளவுள்ளனர்.

### லியாம் – பொக்ஸ் இலங்கை தொடர்பாகக் கவலை

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக லியாம் பொக்ஸ் கவலை கொண்டுள்ளார். 'இலங்கை அரசியல் அமைப்பில் சிறிய மாற்றமொன்றை ஏற்படுத்தி நிலமைச் சீராக்காவிட்டால்' சர்வதேச அரங்கில் இலங்கையின் நிலமை மேலும் மோசமடையலாம் என அவர் கவலை கொண்டுள்ளார்.

### தடுப்புக்காவல் மணித்தியாலய நீட்டிப்புக்கு எதிராக வழக்கு.

காவல்துறையால் கைது செய்யப்படுவர்களை 48 மணிநேரம் காவல்துறைக் கண்காணிப்பில் எடுத்து விசாரணை செய்ய அனுமதிக்கும் சட்டத்திற்கு எதிராக இளம் சட்டத்தரணிகள் சங்கம் மீயுயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

பிடியாணை இன்றி கைது செய்யப்பட்டவர்கள் தற்போது 24 மணி நேரமே காவல்துறைக் கண்காணிப்பில் வைக்கப்படவே சட்டமுள்ளது. எனினும் இவ் 24 மணித்தியாலத்தை 48 மணிநேரமாக நீட்டிப்பதற்கான வலுவைப் புதிய சட்டம் காவல்துறைக்கு வழங்கவுள்ளது.

### நோயெதிர்ப்பு மருந்தால் குழந்தை மரணம்

கராப்பிட்டிய வைத்திய சாலையில் வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு மருந்தால் ஒவ்வாமைக்குள்ளாகிய 10 வயதுச் சிறுமியொருவர் 12.10.2012ல் உயிரிழந்துள்ளார். இதைத் தொடர்ந்து அவருக்கு வழங்கப்பட்ட நோயெதிர்ப்பு மருந்தின் பாவனையைத் தற்காலிககமாக இவ் வைத்திய சாலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

## The Sunday Times:

### ஆயிரக் கணக்கான கார்கள் மீள ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

கார் இறக்குமதியாளர்கள் தமது நட்டத்தைத் தணிப்பதற்காக சுமார் 5000 ற்கும் மேற்பட்ட கார்களை மீள ஏற்றுமதி செய்யும் முனைப்புடன் உள்ளனர்.

இக் கார்கள் ஒன்றில் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் உள்ளதாகவும் அல்லது கப்பலிடப்பட்டுள்ளவையாகவும் உள்ளன. 80வீத. இறக்குமதி வரியுயர்வால் கொள்வனவாளர்கள் குறைவடைந்துள்ளதால் இந் நிலை ஏற்பட்டுள்ளது.

### பாரிய நீர்வழங்கல் திட்டமும் சீனாவிடம்

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல, மினுவான்கொட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள. 232.5 மில். அமெ. டொலர் பெறுமதியான நீர்வழங்கு திட்டமும் சீன கம்பனியிடம் வழங்கப்பட்டுள்ளது. சீன எந்திரவியல் பொறியியல் கூட்டுத்தானம் இத்திட்டத்தைக் கையேற்று பஸ்ணாகொட நீர்த் திடடத்தையும் விருத்தி செய்து சுமார் 630 கிலோ மீற்றர் நீள நீர் வழங்கல் குழாய் இணைப்புக்களையும் மேற்கொள்ளவுள்ளது.

### மனித உரிமை மீளாய்வு நவம்பர் 1ல் – அமைச்சர் ஜெனீவா பயணம்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனீவாவில் நிகவுள்ள ஐ.நா. சபையின் மனித உரிமை மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கைப் பிரதிநிதிகளுக்கு தலைமைதாங்கிச் செல்லவுள்ளார். இக் கூட்டத் தொடரில் இலங்கை மனிதவுரிமை விவகாரங்கள் கடுமையாக ஆய்வுக்குட்படவுள்ளது. நவம்பர் 1ம் திகதி 2.30 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் இலங்கையின் விவகாரம் கையிலெடுக்கபடவுள்ளது. அதன் பின் இந்தியத் தலைமையிலான ஏனைய இரு நாடுகளான ஸ்பெயினும் பெனினும் இலங்கையின் மனிதவுரிமை தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்கவுள்ளன.

### தமிழ்நாட்டு அணுஉலை – இந்தியா இலங்கைக்கு உதவும்.

தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள அணுஉலையில் ஒழுக்குகள் ஏற்படும் போது இலங்கைக்கு அதன் தாக்கம் பரவ முன்னரே எச்சரிக்கையை வழங்கும் கருவிகளை வழங்கவிருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது. இலங்கை இந்திய அதிகாரிகளிடையே நடந்து முடிந்த இருநாட் கூட்டத் தொடருக்குப் பின் இவ் விடயம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அடுத்தாண்டின் ஆரம்பத்திலும் இவ்விடயம் தொடர்பாக மேலதிகமாக பேச ஏற்பாடாகியுள்ளது.

### இருமட்டங்களில் பேச்சுக்கள் – த.தே.கூ. தனது முனைப்பை அறிவிக்கும்.

அரசுடனான பேச்சுக்குத் திரும்புவது தொடர்பான தனது நிலைப்பாட்டைத் த.தே.கூ. மிக விரைவில் தெளிவுபடுத்தும். இந்தியப் பிரதமரின் வேண்டுகோளை அடுத்து பேச்சுக்குத் திரும்பும் நிலையை ஏற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அதற்குப் பதிலாக தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைப் பெறுவதற்கு இந்தியா உதவி செய்யும் எனவும், பேச்சுக்களை இந்தியா மேற்பார்வையிட்ட வண்ணமே இருக்கும் எனவும் தெரிய வந்துள்ளது.

### மத்தள வானூர்தி இறங்கு நிலைய வரிகள் குறைப்பு

அடுத்த வருடாரம்பத்தில் இயங்கு நிலைக்கு வரவுள்ள மத்தள வானூர்தி இறங்கு தளத்தில் இறங்கவுள்ள விமானங்களுக்கு 50% கட்டணக் கழிவுகளை வழங்கவுள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். விமானங்களை இப் புதிய விமான நிலையத்திற்கு வருகைதர ஊக்குவிக்கும் பொருட்டே இக்கழிவுகள் வழங்கவுள்ளன.

சீனாவின் Eximவங்கியின் 190 மில்லியம் அமெரிக்க டொலர் கடனுதவியுடன் உருவாக்கப்படும் இந் வானூர்தி நிலையத்தின் 85% பணிகள் நிறைவுற்றுள்ளன.


## அறிவித்தல்கள்

திருக்கோணமலை, திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்துள்ள 15 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. உடனடியாக தொடர்பு கொள்ளவும். 0770349318.

திருக்கோணமலையில் சாம்பல்தீவு, ஆத்திமோட்டையில் 135 பேர்ச் காணியும் நகர எல்லைக்குள் வங்கிகளுக்கு அருகில் 13 பேர்ச் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : Sri - 0777 299198.

திருக்கோணமலை செல்வநாயகபுரம் ஐயனார் கோவில் வீதியில் விளையாட்டுத் திடலுக்கு அருகில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 026 2224328, 077 1578719.

திருக்கோணமலை, 474 பவர் ஹவுஸ் வீதியில் 30 பேர்ச்சஸ் காணியில் சகல வசதிகளுடன் ஆறு அறை வீடு முழுதாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : 077 9686876, 065 2224410.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பின்னல்...

சிலர் மலைமுரசுக்குத் தெரிவித்தனர். அத்துடன் மீள் விற்பனைச் சந்தையற்ற அப்பொருளின் உண்மைப் பெறுமதியை விடப் பலமடங்கு அதி கூடிய விலையினைக் கொடுத்தே அப் பொருளைக் கொள்வனவு செய்து இத்திட்டத்தில் இணைந்ததாக திருமலையின் பிரபலமான எண்ணியல் பதிப்பக நிறுவன உரிமையாளர் தெரிவித்தார். தான் கொள்வனவு செய்த பொருள் உடனடியாகப் பழுதடைந்த போதிலும் அதனை மாற்றித் தரவோ, விற்பனைக்குப் பிந்திய சேவையினை மேற்கொள்ளவோ எவரும் முன்வரவில்லை எனவும் குறைப்பட்டுக் கொண்ட அவர் "நான் மட்டும் பணத்தை இழந்ததே போதும். வேறு எவரையும் பணத்தை இழக்கச் செய்ய மாட்டேன்" என்ற மனநிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வகை வியாபார நுட்பங்கள் பொருளை வாங்கிப் பாவிப்பதை பிரதான நோக்கமாகக் கொள்ளாமல் மேலும் மேலும் வாங்குபவர்களைச் சேர்ப்பதையே பிரதான நோக்கமாக கொள்கின்றன என முஸ்லிம் மக்களுக்காக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

விக்கிப்பீடியா இணையத் தளத்தினுள் வெளியிடப்பட்டுள்ள தகவலின் படி "பலபடிநிலைச் சந்தைப் படுத்தல்" (Multi-Level Marketing) எனும் தலைப்பில் உருவாகும் இவ்வகை வியாபாரங்களின் மூன்று வகுதிகளாக, கூம்பு விற்பனை (Pyramid Sales), வலைப்பின்னல் சந்தைப்படுத்தல் (Net-work Marketing), உசாத்துணைச் சந்தைப்படுத்தல் (Referral Marketing) ஆகியவற்றை அடங்கும் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன் இத்திட்டத்தில் இணையும் ஒவ்வொருவரும் "வியாபாரப் பங்காளிகள்'' எனப் பெயரிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கல்வியே எனது...

போக்கும், மனித உழைப்பும், அதனை நெறிப்படுத்தும் கல்வியுமே எனது முதல் நிலை நோக்கமாக உள்ளது என கிண்ணியா மத்திய கல்லூரியில் நடைபெற்ற கிண்ணியா வலயப் பாடசாலைகளின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் இயம்பியுள்ளார்.

நான் மூவின மக்களுக்குமாக எனது பணியை ஆற்றக் காத்திருக்கின்றேன். இதற்காக மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து கிழக்கை இலங்கையின் முதல் தரமாகாணமாக மாற்றுவேன் என சூழுரைத்த முதல்வர் கிழக்கின் கல்வி வளர்ச்சியில் பின் தங்கியுள்ள கிண்ணியாப் பிரதேசம் எதிர்காலத்தில் நாட்டுக்கே முன்னுதாரணமாக உருவாக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இப் பரிசளிப்பில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர், சுகாதார அமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் போன்றோர் கலந்து பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மாணவர்களுக்குப் பரிசளித்தனர்.

## கிழக்குப் பல்கலைக்கழக...

நடைபெறும் இப் பூசை நிகழ்வுகளில் இன, மத, மொழி பேதமின்றி மூவின மாணவர்களும் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 24ம் திகதி விஜயதசமி அன்று வாணி விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் அன்னை இல்லச் சிறார்களும், பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து இவ்விழாவினை சிறப்பிக்க இருக்கின்றனர்.

## உள்ளூராட்சி ...

பொருட்கள் போன்றவற்றின் கண்காட்சியொன்று உப்புவெளி பொது நூலகத்தில் தலைவர் திரு.இ.விஜேந்திரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. பட்டிணமும் சூழலும் பிரதேச சபை செயலாளர் திருமதி. மா.அசோக்குமார், பொதுநூலக நூலகர்கள், நூலக உதவியாளர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். உப்புவெளி நூலகத்தினால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நூல்களையும், சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம், செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம், மாதுமையம்பாள் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் கைவினைப் பொருட்கள் ஒட்டு சித்திரங்கள் போன்றன வைக்கப்பட்டன. சாம்பல்தீவு பொது நூலகத்தினாலும் சீனக்குடா வெள்ள மணல் பொதுநூலகத்தாலும் பத்திரிகை துணுக்குகள் பார்வைக்கு வைக்கப் பட்டன.

## கட்டுரைப் போட்டியில்...

2008ம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கலை மன்றம் பாடசாலை ரீதியாக போட்டிகளை நடாத்தி வந்த நிலையில் இவ்வாண்டு வலையமட்டத்தில் தனது போட்டிகளை விரிவாக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

## ஐநாவின் அகதிகளுக்கான

ஐநாவின் தொழிலாளர் நிறுவனம் (ஐ.எல்.லோ) போன்ற பல நிறுவனங்கள் காலத் தேவைகளுக்கேற்பத் தமது அலுவலகங்களைத் திருக்கோணமலையிற் திறந்து யுத்தம் நிறைவிற்கு வந்த பின்னர் தமது பணிகளைச் சுருக்கிக் கொண்டபோது அவ் அலுவலகங்களை மூடிச்சென்று விட்டன. இறுதியாகத் தற்போது அகதிகள் உயர்தானிகர் அலுவலகமும் தமது அலுவலகத்தை மூடிச் செல்லத் தீர்மானித்துள்ளது.

தற்போது எட்டு ஆளணியினருடன் களத்திலுள்ள அகதிகள் உயர்தானிகர் அலுவலகம் அவ் ஆளணியினரில் ஒரு உத்தியோகத்தரை மட்டு கிளிநொச்சிக்கு மாற்றவுள்ளது. ஏனைய அனைவரும் இவ் அலுவலகத்திலிருந்து இடைவிலக நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கான தொழில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் அவர்களுக்கும் அகதிகள் உயர்தானிகர் அலுவலகத்திற்கும் இடையிலுள்ள ஒப்பந்தச் சரத்துக்களுக்கு அமைய வழங்கப்படவுள்ளது.

மீளக் குடியமர்த்தப்படாத பெருமளவு அகதிகள் இன்னமும் கிளிவெட்டி, பட்டித்திடல் போன்ற முகாம்களில் தற்போதும் வாழவாதாரத்தை இழந்து வறுமைக் கோட்டுக்குள் வாழ்ந்துவரும் வேளையில் அகதிகள் உயர்தானிகர் அலுவலகம் தனது திருமலைக் கிளையின் செயற்பாடுகளை முடக்கி அலுவலகத்தை மூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேச்சுப் போட்டியில்...

'உள்ளூராட்சி மன்றத்தின் சவால்கள்' என்னும் தலைப்பில் இடம்பெற்ற இப்பேச்சுப் போட்டியில் நகரைச் சேர்ந்த பல பாடசாலைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் பேரூந்துகள்...

பேரூந்துகளைத் தவிர ஏனைய பேரூந்துகள் யாவும் மதியம் வரை சேவைகளை இடைநிறுத்தியிருந்தன. காவல்துறையினருக்கும் தனியார் பேரூந்துச் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பில் நிறைவுற்றதால் இந் நிலை உருவாகியிருந்தது. குறித்த பேரூந்துச் சாரதி மது போதையிலிருந்ததாகவும் அதனாலேயே காவல் துறையினரால் அவர் தாக்கப்பட்டு காவல்துறை நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் அதற்கு முதல் நாள் இரவில் யாழ்ப்பாணம் செல்லும் பேரூந்தின் அனைத்து இருக்கைகளும் முன்னரே பதிவுசெய்யப்பட்டிருந்ததால் காவல்துறையைச் சேர்ந்த சிலருக்கு இருக்கை கிடைக்காமற் பயணம் செய்யும் நிலை தோன்றிய போதும் லேசான முறுகல் நிலை எழுந்திருந்ததாகவும் உறுதிப்படுததப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

விடயம் இவ்வாறிருக்க 16.10. 2012ல் கொழும்பிற்குச் செல்வதற்காக கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பேரூந்தில் உடனடியாக ஏறிய இளம் வாலிபனும் நங்கையும் அவர்களது இருக்கையின் அருகிலுள்ள கண்ணாடிக்கான திரைச் சீலையை மூடியதால் அதனை அவதானித்த காவல்துறையினர் இருவரையும் விசாரணைக்குட்படுத்திய சம்பவமும் பேரூந்து நிலையத்தில் நிகழ்ந்துள்ளது. சிறிது நேர விசாரணையின் பின் அவர்கள் விடுவிக்கப்பட்டதாக நடத்துனர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.






## அதிபர் பதவிகளில்...

வித்தியாலயம், தி/ சல்லி அம்பாள் வித்தியாலயம், தி/குச்சவெளி விவேகானந்தா வித்தியாலயம் மற்றும் தி/ புனிதவளநார் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை மீள் நிரப்புச் செய்வதிலேயே குறித்த இழுபறிச் சிக்கல் நடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை கடந்த 05.10.2012 வெள்ளிக்கிழமை அன்று குறித்த பாடசாலைகளுக்கான அதிபர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெற இருந்ததாகவும் அப் பரீட்சைகள் பல்வேறுபட்ட அழுத்தங்களால் பின்தள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளிக்கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நேர்முகப் பரீட்சைக்குத் தயாராகவிருந்த அபேட்சகர்களுக்கு அன்றைய தினம் அதிகாலையிலேயே நேர்முகப் பரீட்சைகள் பின்தள்ளப்பட்டுள்ளன எனும் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. எனில் அதற்கும் முதல் நாள் இரவிலேயே இக்கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் என நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் நேர்மையான அணுகுமுறைகளைப் பின்பற்றியிருந்தால் எவ்வித அழுத்தங்களுக்கும் கல்வி நிர்வாகிகள் அஞ்சியிருக்கத் தேவையில்லை எனவும் குறைப்பட்டுக் கொண்டார்.

## 150வது ஜனன தினம்



சுவாமி விவேகானந்தரின் 150வது ஆண்டு நிறைவை முன்னிட்டு தி/விபுலானந்தா கல்லூரியும். தி/ஸ்ரீவாணி வித்தியாலயமும் இணைந்து நடத்திய சுவாமி விவேகானந்தரின் நினைவு விழா 12.10.2012 வெள்ளிக்கிழமை தி/விபுலானந்தா கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு.R.ஜெரோம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வலயக்கல்வி திணைக்களத்தைச் சேர்ந்த உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு தவநாதன் தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் திரு.மா.இராசரெத்தினம் திரு.கு.நளினகாந் ஆசிரியர் ஓய்வுபெற்ற அதிபர் திரு.சித்திரவேலாயுதம் தி/ஸ்ரீவாணி வித்தியாலய அதிபர் திருமதி.வி.அன்பழகன் ஔவைநகர் பாடசாலை ஆசிரியர் திரு.பார்த்தீபன் அயற் பாடசாலை ஆசிரியர்கள் இருபாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 21. 10. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.